
www.tamilarangam.net

# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று.



"புதுயுகம் நோக்கி இனிப் புறப்படுவோம் வாருங்கள்!"

வைகாசி- ஆனி 1992 POOVARASU

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

S.J.P.Traders
உங்களை அன்புடன் அழைக்கிறது!

உங்கள் விருப்பத்திற்கேற்ப
பழைய,புதிய திரைப்படங்களின்
VIDEO CASSETTE வாடகைக்கும்
திரைப்படப்பாடல்கள் அடங்கிய
AUDIO CASSETTE &CD விற்பனைக்கும்
பெற்றுக்கொள்ள-
S.J.P.Traders,
Sielwall.7
2800 Bremen.1

உங்கள் இல்லத்தேவைக்கேற்ற-
இலங்கை,இந்திய உப உணவுப்பொருட்கள்,
மரக்கறி,மீன் வகைகள்,குடிவகைகள்
என்பனவற்றையும் பெற்றுக்கொள்ள-
இன்றே நாடுங்கள்-

# S.J.P.Traders,
# sielwall.7
# 2800 Bremen.1

Tel:0421/71547.

---

உங்கள் தேவையே எங்கள் சேவை.

www.tamilarangam.net

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.


# பூவரசு

**POOVARASU.**
TAMILISCHE KULTUR MAGAZIN

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று

*வைகாசி- ஆனி 1992*

## இதழ்: 9



*இனிய தமிழ் ஏடு.*

படைப்பவர் ஆக்கம் தருக
படிப்பவர் ஊக்கம் தருக.

தொடர்புகளுக்கு:
**poovarasu**
Sinniah Maheswaran,
Neuwieder Str-32,
2800 Bremen 41,
Germany.

வாழ்த்தும் நெஞ்சங்கள்.

''பூவரசு'' இன்னும் பல விழாக்கள் கண்டு வாசகர்கள், ஆக்கதாரர்கள் எங்கள் மத்தியில் பவனிவரவேண்டுமென்று விரும்புகிறேன்.

— எஸ். சிவதுரை (ஷ்வெனிங்கன்)

''பூவரசு'' இதழ் என்கரம் கிடைக்கப்பெற்றேன். மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். உலகத் தமிழ் மக்களுக்காக பூத்துக் குலுங்கும் பூவரசு இதழ் வாசகர்களில் நானும் ஒருவன். இந்த இனிமையான பூவரசு மலர் பல்லாண்டு காலம் வளர்ச்சி பெறவும், பூத்துக்குலுங்கவும் வாழ்த்துகிறேன்.

— என். லோகேஸ்வரன் (கொம்புர்க்)

''பூவரசு'' கண்டேன்; படித்தேன்; மனம் மகிழ்ந்தேன். அத்தனை பக்கமும் தப்பாமல் படித்தேன். பத்திரிகை நடத்தித் துன்பப்பட்டவர்களில் நானும் ஒருவன். அதனால் அத்தனை சிரமங்களுக்கு மத்தியில் பூவரசு வெளிவருகிறது என்பதனை என்னால் உணரமுடிகிறது. உங்கள் பணி தொடர என்வாழ்த்துக்கள்.

— பொன் தியாகராஜா (டென்மார்க்)

இந்துமகேஷின் மௌனத்தில் அழுகின்ற மனங்கள் படித்தேன். யதார்த்தங்களையே அவரது கதைகளில் நான் காண்பதுண்டு. அந்தவகையில் இந்தக்கதையின் பாத்திரங்களை அவர்தன் கற்பனைக்குச் சொந்தமாக்கிக் கொண்டாலும், படிக்கின்றபோது கம்நாட்டுச் சூழ்நிலைகளையே நினைக்கத் தோன்றுகிறது. கடைமுறைச் சம்பவங்கள் பின்னிப்பிணைக்கப்பட்டிருக்கிறது. தொடரட்டும்..!

— கே. ஸ்ரீதாஸ் (நெதர்லாண்ட்)

பூவாசலையைக் காணாது ஏங்கியது பூவரசு...
கண்டேன். பிரமாதம்! ஓராண்டுகாலத்தில் பூவரசில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி எம்மையெல்லாம் பூரிக்கவைக்கிறது. பூவரசு வாசகர் காசிநாதன் வரைந்தனுப்பிய சின்னம் பூவரசுக்கு மேலும் அழகு சேர்க்கிறது. தீவானின் ''அவள்'' நெடுங்கதை அழகாகச்செல்கிறது. அடுத்த இதழை எதிர்பார்க்கவைக்கிறது.

..............

— என். ஸ்ரீதர் (பிரான்ஸ்)

பூவரசே!
புன்னகைக்கநேரமின்றி மாடாய் உழைக்கும்
மக்கள்மத்தியிலே—
புதுப்பாட்டுப்பாடவந்த பூவரசே!
உன் பாட்டுக்கேட்டு என்மனம் ஆடுது ஆவாத்தத்தால்.
பூவரசே உன்னில் பலபூக்கள்
புதுப்பூக்கள் பூக்கக்கண்டு பூரிக்கின்றேன்.
என்றும் நீ எங்கள் கைகளில் தவழவேண்டும்
வாடாமலராக!
வளர்க!

— சிற்றர்குலம் (ருய்ஸல்பேர்க்)

.....இதுநாள்வரையில் எழிலோடுவிளங்கிய
எங்கள் பூவரசு இப்போது பொலிவுபெற்றிருக்கிறது
புதிய சின்னத்தால்.
பூவரசு— பூக்களின் அரசு.
பூவரசு—இதழ்களின் அரசு.
பூவரசு—இதயங்களின் அரசு.
பூவரசு—புவியின் அரசு.
இதயத்தின் வடிவில், பூவரசு இலையின் வடிவில்,
எழுதுகோல்முனையின் வடிவில்,
முடிதாங்கி நிற்கும் பூவரசுச்சின்னம்
என்றும் எங்கள் இதயங்களில் நிலைத்திருக்கும்
என்பது திண்ணம். சின்னத்தைவரைந்தனுப்பிய
காசிநாதன் அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்கள்!

— பத்மா ஞானப்பிரகாசம் (பிறேமன்)

www.tamilarangam.net

**பூவரசு ஆண்டுமலர்–**
**ஒரு கண்ணோட்டம்.**

ஆய கலைகள் அறுபத்திநான்கு.
அதிலொன்று இலக்கியம்.
கவிதை,உரைநடை என்று இலக்கியத்தின்
பாகங்கள் இரண்டு.
பல்வேறு காலங்களில் பல்வேறு இலக்கியங்கள்
தோற்றம் பெற்றிருக்கின்றன.
தோன்றிக்கொண்டும் இருக்கின்றன.
இலக்கியச்சஞ்சிகைகள் வரிசையில்–
இப்போது பூவரசும்.
எல்லாவிதமான சஞ்சிகைகளுக்கும் மத்தியில்
எல்லோருக்கும் பயன்தரும் ஒரு சஞ்சிகையாக
பூவரசு.
பூவரசு இதழ்களில் சிலவற்றைப் படித்தேன்..
ஆண்டுமலர்பற்றி எழுதத்தோன்றியதால்–
இந்த விமர்சனம்.

சுவிஸிலிருந்து–
திருமதி கேதீஸ்வரி அசோகன் பீ.ஏ.

''சந்திப்போம் சிந்திப்போம்'' என்கின்ற பகுதியில்
''தாங்கள்'' என்ற ராஜனின் கட்டுரையே விமர்சனம்
செய்யத்தூண்டுகோலாக இருந்தது.
எந்தமொழி பயின்றாலும் தமிழ்மொழிகற்றல் அவசியம்
என்பதனை ஆதரிக்கும் மக்களில் நானும் ஒருத்தி.
எந்தமொழியில் பாண்டித்தியம் அடைந்திருந்தாலும்,
தாய்மொழியாம் தமிழ்மொழியில் அறிவேதும்
இல்லாதவர்கள் தமிழர் என்று சொல்வதற்கு
அருகதையற்றவர்களே.
எனவே,எமது இளம் சமுதாயம் தமிழினைப்
பிழையறக்கற்று,அதில் அவர்களது ஆக்கங்களும்
வளர இடமளிக்கவேண்டும்.
இதற்கு பூவரசு சஞ்சிகையும் தனதுபணியை

பூவரசு ஆண்டுமலரில் இடம்பெற்ற
சித்ரா மணிவண்ணனின் ''வளையாத நேர்கோடுகள்''
நெடுங்கதை சமுதாயத்தைப்படம்பிடித்துக்காட்டும்
ஒரு கருவியாக அமைந்துள்ளது.
உண்மையில் தமிழர்கள் நாடுவிட்டு நாடுவந்து
அகதிகளாகவாழ்ந்துகொண்டும் பெருமை
பேசுபவர்களாகவே காண்கிறோம்.
இங்குள்ள வசதிகளை அனுபவித்தாலும்
மனச்சந்தோசம் வெறும்போலி என்பதனை மக்கள்
உணரவில்லை என்ற கருத்தை நித்யா என்ற
பாத்திரத்தின்மூலம் எடுத்துக்காட்டிய ஆசிரியையின்
பாங்கு பாராட்டத்தக்கது.

''படைப்பாளிகள் அறிமுகம்'' வசனகவிதை வடிவில்
ஜெகதீஸ்வரி இராஜரட்ணம் அவர்களை அறிந்துகொண்டோம்.
அவரது படைப்புகள் மென்மேலும்பெருக எமது
வாழ்த்துக்கள்.

''தமிழ்நாட்டைச்சுற்றும்'' அனுபவக்கட்டுரைமூலம்
வீ.ஆர்.வரதராஜா அவர்கள் தனது
அனுபவங்களைத் தொடர்வது ரசிக்கத்தக்கதாய்
அமைந்துள்ளது.

''புதுப்பாட்டிலே'' –கவிதைவடிப்பதில் பல்வேறு
வகைகள் இருப்பதனையும்,பல்வேறுவகையான
சமுதாயவெளிப்பாடுகளை வெளிக்கொணர்வதையும்
காண்கிறோம்.

''பார்வை''என்ற சிறுகதை ஒரு அழகிய கற்பனைக்கு
எடுத்துக்காட்டாகத்திகழ்கிறது.''தீவான்'' என்ற
அந்தப்படைப்பாளரது கற்பனை மேலும்பெருக
எனது வாழ்த்துக்கள்.

''பிரிவு'' என்ற சிறுகதை படைப்பாளரின்
கற்பனையோ அல்லது நிஜமோ என்று எண்ணத்தக்க

''என் வாசகர்களைத்தேடி'' என்ற இந்துமகேஷின் தொடர் கருத்துக்கள் எழுதுபவனையும், வாசிப்பவனையும் ஒருங்கே காட்டுகிறது. அத்துடன் எழுதுபவனைத்தூண்டவும், எப்படியானவற்றை மக்கள் ஏற்கின்றனர் என்பதனை அறியத்தக்கதாகவும் அமைகின்றது.

வீட்டுக்குறிப்பு,சமைத்துப்பார்க்கலாம் பகுதி மங்கையருக்கு இன்றியமையாததாய் விளங்குகிறது.


அத்துடன்–
சிறுவர் பகுதியான ''எங்கள் இளந்தளிர்கள்'' என்னை மிகவும் கவர்ந்துள்ளது.
இளம் சமுதாயத்துக்கு ஊக்கம் அளிக்கும் பகுதி அது.ஞானேஸ்வரி ஆசிரியையின் தைப்பொங்கல் கட்டுரையும்,அம்பியின் இன்பப்பொங்கல் பாட்டும், பருவியும் தருவியும் என்ற அருணின் சித்திரத்தோடு கூடிய கவிதையும் பாராட்டும்வண்ணமுள்ளன.
அத்துடன் குழந்தைகளின் சித்திரத்திறனை வளர்ப்பதற்கும்,நுண்ணறிவினைக் கூட்டுவதற்கும் புள்ளிப்படங்கள் மிகமிகச் சிறந்துவிளங்குகின்றன.

பழைய இலக்கியங்களை பேணிப்பாதுகாப்பது பெரியகஷ்டமாகையால் அவற்றில் ஓரளவினையேனும் சஞ்சிகையில்வெளியிடுவதனால் அன்றைய இலக்கிய தரத்தினை இன்றைய சமுதாயம் மறக்காதிருக்க ''இலக்கிய இன்பம்'' பகுதி உதவுகிறது.

''வாழ்த்தும் நெஞ்சங்கள்'' பகுதியில் வாசகர்களது கருத்துக்களை ஆசிரியர் வெளியிடுகிறார்.
இதன்மூலம் இச்சஞ்சிகையின் குறைநிறைகளை அறிவதோடு வாசகர்களது எண்ணக்கருத்துக்களும் ஒருவகை இலக்கியமாக அமைந்து படைப்பாளர்களுக்குப் பெரும் உதவி புரிகின்றது.

மொத்தத்தில்,
பூவரசு சஞ்சிகையின் ஆண்டுமலர் ஒரு கலைக்களஞ்சியமாகவே திகழ்கிறது எனலாம்.
ஆண்டுமலரின் அட்டைப்படமே அதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.
பல சிரமங்களுக்கு மத்தியிலும் இச்சஞ்சிகை வெளிக்கொணரப்படுகிறது என்பதனை நான் உணர்வேன்.
இச்சஞ்சிகை உருவாவதற்கு உதவிய அனைவருக்கும் வாசகர்களோடு இணைந்து வாழ்த்துக்கள் கூறுகிறேன்.
அடுத்த பூவரசு எப்போது பூக்கும் என்ற மனநிலையில் வாசகர்கள் இருக்கிறார்கள் எனக்கூறின் மிகையில்லை.

*




www.tamilarangam.net


www.tamilarangam.net

– இலக்கிய இன்பம்.

# மலர்கள்.

காடுகளில் மலைச்சோலைகளில்
கபிலப்புலவன் கண்டறிந்து
குறிஞ்சிப்பாட்டில் கோடிட்டுக் காட்டியுள்ள
மலரினையெல்லாம் பறித்தெடுத்து
என்மனம் பறித்த மாத்தமிழ்ச்சுவடிகள்மேல்
மாரியெனப் பொழிந்திடுவேன்

இதோ
கபிலர் காட்டும் மலர்கள் காண்க!



"........................வள் இதழ்
ஒண்செங் காந்தள்,ஆம்பல்,அனிச்சம்
தண்கயக் குவளை,குறிஞ்சி,வெட்சி,
செங்கொடுவேரி,தேமா.மணிச்சிகை
உரிதுநாறு அவிழ்தொத்து உந்தூழ்.கூவிளம்,
எரிபுரை எறுழம்.சுள்ளி.கூவிரம்
வடவனம்,வாகை,வான்பூங் குடசம்,
எருவை,செருவிளை,மணிப்பூங் கருவிளை,
பயினி,வானி.பல் இணர்க்காயா,
விரிமலர் ஆவிரை,வேரல்,சூரல்,
குரீ ஈப்பூளை,குறுநறுங்கண்ணி,
குருகிலை.மருதம்,விரி பூங்கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி.அதிரல்,பெருந்தண் சண்பகம்,
கரந்தை,குளவி,கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை,கல் இவர் முல்லை,
குல்லை.பிடவம், சிறுமா ரோடம்,
வாழை, வள்ளி,நீள்நறுநெய்தல்,
தாழை,தளவம்,முள்தாட் தாமரை,
ஞாழல்,மௌவல்,நறுந்தண் கொகுடி,
சேடல்,செம்மல்,சிறுசெங்குரலி,
கோடல்,கைதை,கொங்கு முதிர் நறுவழை,
காஞ்சி,மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்,







www.tamilarangam.net

பாங்கர்,மரா அம்,பல்பூக் கணக்கம்,
ஈங்கை,இலவம்,தூங்கு இணர்க்கொன்றை,
அரும்பு,அமர் ஆத்தி,நெடுங்கொடி அவரை,
பகன்றை,பலாசம்,பல்பூம் பிண்டி,
வஞ்சி,பித்திகம்,சிந்துவாரம்,
தும்பை,துழா அய்,சுடர்ப்பூக் தோன்றி,
நந்தி,நறவம், நறும் புன்னாகம்,
பாரம்,பீரம்,பைங்குருக்கத்தி
ஆரம்,காழ்வை,கடி இரும்புன்னை,
நரந்தம்,நாகம்,நள்ளிருள் நாறி,
மா இருங்குருந்தும்,வேங்கையும்,பிறவும்.

*(பத்துப்பாட்டு–குறிஞ்சிப்பாட்டு–*
*61 முதல் 95 முடிய.)*
*பாடியவர்: கபிலர்.*



பத்துப்பாட்டாம் குறிஞ்சிப்பாட்டில் –மலர்களைப்
பட்டியல்போடும் பாங்கே, பாவையர்
சரம் தொடுத்ததுபோல் அமைந்திட்டதம்மா; இந்தச்
சங்கத்தமிழின் பெருமையைச் சாற்றுதல் எளிதோ?

— திரட்டித்தருபவர்:
வீ.ஆர்.வரதராஜா.

கடந்த இதழில் வெளியான
'நாடுகளை நாமறிவோம்' பகுதியில்
இடம்பெற்றிருந்த தகவல்கள்
'பாகிஸ்தான்–பங்களாதேஷ்' ஆகிய
இருநாடுகளையும்பற்றியது.

www.tamilarangam.net

# சிந்தனைக் கீற்றுகள்



பக்கத்துவீட்டுப்பலகீனங்களை அறிய
காதைக்கொடுத்துக்கொண்டேயிருந்தால்
உள்வீட்டுப்பலகீனங்களையே அங்கிருந்து
கேட்டுகொண்டிருப்பாய்.



நீ செய்த குற்றத்துக்கு ஒருவன்
அதிகப்படியான தண்டனை தந்தால் சிரித்துவிடு.
ஏனென்றால் இப்பொழுது அவன் குற்றவாளி;
நீ நிரபராதி.





நீ அன்றாடம் செய்கின்ற தவறுகளை
அன்றாடம் மறந்துகொண்டேயிருக்க உன்னோடு
கூட இருப்பவன் எல்லாவற்றையும் சேர்த்துவைத்து
ஒருநாளைக்கு உனக்கு நினைவுபடுத்துவான்.


உன் நண்பனைப்பற்றி நூறுபேரிடம்
நல்லதாய் சொல்லு அந்த செய்தி உன் நண்பனுக்கு
எட்டாது.ஒருவனிடம் உன் நண்பன் தீயவன் என்று
சொல்லு உடனடியாக அந்தச்செய்தி உன் நண்பனுக்குக்
கிடைத்துவிடும்.

சிந்தித்தவர்: யோகன்.

உன்னுடைய இயலாமைக்கு உன்னைவிட
இயலாதவனைப்பார்த்து சமாதானம் அடையாதே.
ஏனென்றால்—ஒன்று உன் சுயமுயற்சி மழுங்கிவிடும்:
இன்னொன்று சிலநேரம் அவர்கள் உன்னைவிட
முன்னேறிவிட்டால் உன் மனம் அமைதி
இல்லாமல் தவிக்கும்.

எந்தவொரு குறள் என்றால் என்ன
காவியம் என்றால் என்ன
மதியாதார் வாசல் மிதிக்காதே என்று
சொல்கிறதே தவிர மதிக்காதவர் வந்தால்
மிதித்துவிடு என்று சொல்லவில்லை.





றைவன் தனக்கு பூசைசெய்பவர்க்கெல்லாம்
ணைவழங்கியும்,பூசை செய்யாதவர்க்கெல்லாம்
ட்னை வழங்கியும் இருந்திருந்தால்
ன்று இறைவன்மேல் இருக்கின்ற நம்பிக்கை
வையற்றதாய்ப் போயிருக்கும்.



ஏழையாய் இருக்கும்போது உன்னை மதித்தவன்
வசதி வந்ததும் உன்னை உதாசீனப்படுத்தினால்
நீ மகிழ்ச்சியாய் இரு.ஏனென்றால்—
அவனுக்காக நீ இனி எதையும் இழக்கவேண்டியதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பூவரசு வாசகர் வட்டம்–
## முதலாவது இலக்கியச்சந்திப்பு.

பூவரசுபற்றியும்,பூவரசு வாசகர்வட்டம்பற்றியும், மேற்கொள்ளப்படவேண்டிய கலை,இலக்கியப்பணிகள்பற்றியும் பிறேமன் நகர வாசகர்களுடனும் படைப்பாளர்களுடனும் கருத்துப் பரிமாறிக்கொள்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த முதலாவது இலக்கியச்சந்திப்பு, 18.03.92 புதன்கிழமை மாலை 3 மணிக்கு ரெனேவர்–கலாச்சாரநிலையத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு பூவரசு வாசகர்வட்டம்பற்றி அறிவித்திருந்த பூவரசு,பூவரசு ஆண்டுமலருடன் பூவரசு வாசகர்வட்டம்பற்றிய சிறுகையேடு ஒன்றை வெளியிடுவதாக அறிவித்திருந்தது..ஆனால், இதுகாலவரையில் அதுபற்றிய மேலதிக தகவல்கள் எதுவும் பெறப்படவில்லை என்பது வாசகர்களின் குற்றச்சாட்டாக இருந்தது.

இன்று பல்வேறு இடங்களிலும் பரந்துபட்ட அளவில் பலவிதமான சஞ்சிகைகள் தோற்றம்பெற்றுள்ள இந்தக்காலகட்டத்தில்,பூவரசுமட்டும் தனக்கென ஒரு வாசகர்வட்டத்தை அமைத்துக்கொண்டு பெரிதாக எதைச்சாதித்துவிடப்போகிறது என்பதே முதற்கேள்வியாக இருந்தது.

வாசகர்வட்டம் என்னும்போது அது வாசகர்களுக்குமட்டும்தானே.. படைப்பாளிகள் இதில் அங்கத்துவம்பெறவேண்டுமெனில் வாசகர்வட்டம் என்றபெயர் மாற்றப்பட்டு பூவரசு இலக்கிய வட்டம் என்று பெயர் மாற்றப்படலாமே என்ற அபிப்பிராயங்களும் பூவரசுக்கு வந்தன.
ஆயினும்–
எல்லா வாசகர்களும் படைப்பாளிகள் என்ற வட்டத்துக்குள் அடங்க முடியாவிடினும்,எல்லா படைப்பாளிகளும் வாசகர்மட்டத்துக்குள் அடங்குவர் என்பதால் பூவரசு வாசகர்வட்டம் என்பதே சரியான பெயராக இருக்கும் என்று முடிவுசெய்யப்பட்டது.

பூவரசு வாசகர்வட்டத்துக்கென இதுவரை அங்கத்துவம் பெற்றுள்ளவர்களின் விபரங்கள் அடங்கிய சிறுகையேடு விரைவில் வெளியிடப்படும் என உறுதியளித்த பூவரசு ஆசிரியர் அனைத்துப் பூவரசு வாசகர்களும் இவ் வாசகர்வட்டத்தில் இணைந்து கொள்ளத்தக்கதாக இதுபற்றிய விபரங்கள் பூவரசில் வெளியிடப்படும் என்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்து மாநிலங்களிலுமுள்ள பூவரசு வாசகர்வட்ட அங்கத்தவர்களையும்,ஓரிடத்தில் இதுபோன்ற இலக்கியச்சந்திப்புக்களுக்கு வருவிப்பதிலுள்ள நடைமுறைச்சிக்கல்களை சுட்டிக்காட்டிய பூவரசு ஆசிரியர்,அனைத்துவாசகர்களினதும் கருத்துக்களையும் கடிதமூலம் ஒன்றுதிரட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகச் சொன்னார்.

பூவரசு வாசகர்வட்டத்தின் நோக்கங்கள்பற்றிக்கேட்கப்பட்டது. அவைபற்றிய விபரங்களைத்தந்த ஆசிரியர்,இந்தவிபரங்கள்பற்றிய பூவரசு வாசகர்கள் அனைவரினதும் கருத்துக்கள் பெறப்படுவதற்காகக் கேள்விக்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டு பூவரசு இதழில் வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

பூவரசு வாசகர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு பூவரசு, பூவரசு வாசகர்வட்டம் என்பவற்றில் மாற்றங்கள் கொணரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்துநகரங்களிலுமுள்ள பூவரசு வாசகர்களின்மூலம் வாசகர்வட்டம் விரிவுபடுத்தப்பட்டு கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படவேண்டும் என்றும்,
அனைத்துக்கலை இலக்கிய ஆர்வலர்களையும் பூவரசு சென்றடையத் தக்கதாக வழிவகைகள் செய்யப்படவேண்டும் என்றும்,
அரசியல் சார்பற்ற அதே சமயம்,நமது மண்ணுக்கும் மொழிக்குமுரிய உணர்வுகளை மதித்துப்போற்றும்வகையில் கலை,இலக்கிய ஆர்வலர்கள் ஒன்றிணையவேண்டும் என்றும்,இதற்கான வேலைத்திட்டங்களில் பூவரசு வாசகர்வட்டம் ஆர்வம் காட்டவேண்டும் என்றும்,
இலக்கியச்சந்திப்பில் கலந்துகொண்ட வாசகர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

பூவரசு இனிய தமிழேட்டின் ஓராண்டுகால வளர்ச்சிபற்றியும், இதன் வளர்ச்சிக்கான வேறுபல ஆலோசனைகள்பற்றியும், ஆசிரியர், படைப்பாளிகள்,வாசகர்மட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

பூவரசு இதழில் அரசியல் செய்திகள்பற்றி கருத்துக்கள் எழுந்தன.
''அரசியலை நேரடிச்செய்திகளாக அல்லது ஆசிரியர் கருத்தாக வெளிப்படுத்தலாம்'' என்றார் திரு யோகநாதன்.
கதைமூலமோ,கவிதைமூலமோ,அரசியல்நிலைமைகளை வாசகர்களுக்கு உணர்த்தமுடியாதென்றும் அது ஒருசிலரை ஊனப்படுத்துவதாக அமையுமே தவிர தெளிவுபடுத்தாதென்றும் அவர் கூறினார்.
அவரது கருத்தைமறுத்த வாசகர் திரு பீலிக்ஸ்,
''எமது வாழ்க்கையோடு அரசியல் பின்னிப்பிணைந்துள்ளதை நான் மறுக்கவில்லை...அதேசமயம்,அரசியல்செய்திகளை(குறிப்பாக நம்நாட்டுச் செய்திகளை)உடனுக்குடன்வெளியிடமுடியாதநிலையிலுள்ள பூவரசு அவற்றைத்தவிர்ப்பது நல்லது.''என்று கூறினார்.

www.tamilarangam.net

''அரசியல் என்பது இன்று நம்வாழ்வோடு பின்னிப்பிணைந்திருப்பதால்,
நமது நாட்டுநிலைமைகளைக்காலம்கடந்தேனும் அறிய செய்திகள்
உதவுகின்றன..எனவே அவைகளை வெளியிடுவது நல்லது''என்று
திருவாளர்கள் சிவஞானகுமார்,விக்னேஷ் ஆகியோர் தெரிவித்தனர்.

சினிமா என்பதும் இன்றைய ஒரு கலைவடிவம்.
எனவே சினிமாச்செய்திகள் பூவரசு இதழில் சேர்க்கப்படுவதுபற்றி
கருத்துக்கள் எழுந்தன.
சினிமாச்செய்திகளைத் தாங்கி அனேகசஞ்சிகைகள் வெளிவருவதால்
பூவரசுக்கு அது அவசியமில்லை என்றகருத்து முன்னெழுந்தது.

''காலத்துக்குக்காலம் சமுதாய இரசனைகள் மாறிவருவதால்
தரமான படங்களின் விமர்சனங்களை வெளியிடலாம்'' என யோகநாதன்
கூறினார்.
''திரைப்பட விமர்சனங்கள்மூலம் நல்லவிடயங்களை எமது
கண்ணோட்டத்தில் எழுதுவது தகும்''என்று திருமதி பத்மினி பாம்
கூறினார்.

''தொலைக்காட்சி வடிவங்கள்மூலம் இப்போது பல்வேறுவகையான
நிகழ்ச்சிகள் நமது புலன்களைக்கவர்கின்றன.உதாரணமாக,
ஒலி-ஒளி நாடா(வீடியோ)சஞ்சிகைகள்,கலைவிழாக்கள் சம்பந்தமான
தொகுப்புக்கள் இவற்றின்மூலம் நம்நாட்டுக்கலைஞர்களையும்,புதிய
கலைவடிவங்களையும் நாம் காண்கிறோம்.இவைபற்றிய தரமான
விமர்சனங்கள் அவற்றின் வளர்ச்சிக்கு உதவக்கூடும்.எனவே,
திரைப்படவிமர்சனங்களுக்குப்பதிலாக இவைபற்றிய விமர்சனங்கள்
பயன்மிக்கன என்றும் கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் சொல்லப்பட்ட கருத்துக்கள்பற்றிய வாசகர்களின்
கருத்துக்கள் கிடைத்தபின்னர்,இரண்டாவது இலக்கியச்சந்திப்பு
ஒழுங்குசெய்யப்படும் என்று ஆசிரியர் தெரிவித்தார்.

தொகுப்பு:சித்ரா மணிவண்ணன்.

அடுத்த இதழில்
யோசப் ரட்ணம் எழுதும்
நமது தாயகம்-சிலகுறிப்புக்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காயம்

உணர்ச்சிகள்
உணர்வுகள் இயல்புதான்
உனக்குமட்டுமேன் அது
உயிரற்றுப்போய்விட்டது
சற்று சங்கடமாகத்தான் உள்ளது

உன்
முடிகளின் கருமையைக்கண்டு
இருள்கூட ரோசம்காட்டியதால்
என் புன்னகைகூட புதைந்தது
என்னோடு.

என்
உயிர்த்துடிப்பின் வேகத்தைக்கேட்டு
மேகத்தின் இரைச்சலும் இடிகளும்
ஒதுங்கியது
தன்னோடு

உன்
மரணித்த வார்த்தைகள்
என்னை நெருங்கியதால்
சகித்துக்கொள்ளமுடியாத என் மனசு
சலித்துக்கொண்டது
உன்னோடு

என் காதலுக்குப் பிரிவு இல்லை
அவசரப்பட்டாய்......
என் அன்புக்கு எல்லை இல்லை!
அடிமைப்பட்டாய்.......
நீ
எய்திருந்த அனுதாபச்செய்திகள்
நீந்தத்தெரியாதவன்
முத்தெடுக்கப்போன
கதையன்றோ?

பூமிதனில்
உன் பாதங்கள் நடைபயிலும் பொழுதெல்லாம்
அவை,கற்களாலும் முட்களாலும்
காயப்படக்கூடாது என்பதற்காக
என் இதயத்தை
பாதணியாக தியாகம்செய்தவன் நான்
இந்த
தியாக வரலாற்றில்
சிதையுண்டுபோன என் இதயமேடையில்
இனியும்
உன் பரதநாட்டியத்தை அரங்கேற்ற
நினைத்துவிடாதே!

—ராஜன்'ஸ் ஆட்டிஸ்ட்—
புங்குடுதீவு–10.
கவிற்சர்லாக்த்.

எஸ்.எஸ்.சுதிரு.

நகைச்சுவைக்கவிதைகள்.

சீவிலிக்கூட்டிடம்
''நாளை சந்திப்போம்''
முத்தமிட்டு விடைபெறும்
பென்சில்.

*

தீயணைக்கும் படையை
உதவிக்கு அழைக்கும்
மெழுகுவர்த்தி.

*

வாய்விட்டுச் சிரித்தால்
நோய்விட்டுப்போகும்
வாய்விட்டுச்சிரித்தேன்
சிவப்பு விளக்கருகே
நின்றவளைப்பார்த்து.
நோய்தான் வந்துசேர்ந்தது
AIDS.

*

MONEY க்காக
மணிக்கூட்டை
அடைவுவைக்கும் மனிதன்.

*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூ ஒன்று வாடுகிறது!

- இ.சம்பந்தன் -

சாருமதி கணிதபாடத்தை விளக்கிமுடிப்பதற்கும் பாடசாலைமணி ஒலித்து ஓய்வதற்கும் நேரம்சரியாக இருந்தது.
மாணவ.மாணவிகள் வெண்புறாக்கள்போல் வெள்ளைச்சீருடையில் புறப்பட்டு கலகலப்பாக உரையாடிக்கொண்டுசெல்லும்காட்சி மனத்தை நிறைத்தது.
எவ்வித கவலையோ துக்கமோ இல்லாமல் சிட்டுக்குருவிகளைப்போன்று சுதந்திரமாக சயிக்கிளிலும், நடந்தும்.கூட்டம் கூட்டமாக அவர்கள் செல்லும் திசையையே பார்த்துக்கொண்டிருந்த சாருமதி தானும் ஒரு மாணவியாகக்காலமெல்லாம் இருந்திருக்கக்கூடாதா என எண்ணிக்கொண்டாள்.
அப்பொழுது அவளருகில் கேட்ட காலடியோசை யாரோ நடந்துவருவதை உணர்த்தியது.
திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.
''என்ன சாருமதி பலமான யோசனை'?'' என்று கேட்டுக்கொண்டு கமலம் ரீச்சர் சாருமதியின் அருகில் வந்தாள்.
''நானும் உன்னுடன் சிறிதுதூரம் வருகின்றேன்..தபாற்கந்தோரில் முத்திரைகள் வாங்கவேண்டி உள்ளன...அவர் கனடாவில் இருந்து கடிதம்போட்டவர்..இன்னும் நான் பதில்போடவில்லை..!''என்றவாறு சாருமதியுடன் சேர்ந்து நடந்தாள் கமலம்.
கமலம் ரீச்சரும் சாருமதியும் சிறுவயதிலிருந்தே ஒன்றாகப்படித்தவர்கள் ..சிநேகிதிகளும்கூட.தாங்கள் பிறந்துவளர்ந்து.நடைபயின்ற அதேகிராமத்துப் பாடசாலைக்கு இருவரும் ஒரேநாளில் ஆசிரிய நியமனம்பெற்று வந்துவிட்டனர்.

---

அடுத்த இதழ் பூவரசு
யூலை 1ம்திகதி வெளிவருகிறது.
பூவரசு தனி இதழ்—
4 டொச்ச மார்க்குகள்.
ஆண்டுச்சந்தா 30 டொச்ச மார்க்குகள்.
(தபாற்செலவுடன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கமலம் ரீச்சர் ஏழு ஆண்டுகளுக்குமுன்பே திருமணம்செய்து,மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள்.
அவளுக்கு எப்போதும் தனது சிநேகிதி சாருமதியைப்பற்றிக் கவலைதான்.
''எவ்வளவு காலத்திற்குத்தான் இப்படி இருக்கப்போகிறாய் சாருமதி''..
அப்பா,அம்மா,தங்கை என்று பார்த்துக்கொண்டிருக்கிறாய்..உனக்கொரு குடும்பம் குழந்தையென்று வேண்டாமா?''
தோழியை நிமிர்ந்துபார்த்த சாருமதி மௌனமாகச்சிரிக்கின்றாள்.
அந்தச்சிரிப்பிலே ஒருவிதசோகம் கலந்திருந்தது.
அவர்கள் நடந்துசெல்லும் அந்தக்கிராமத்தில்,பிரதானவீதியின் வலது பக்கத்தில்தான் தபாற்கந்தோர் இருக்கிறது.அதன் அருகாமையில் சென்றதும்,கமலம் ரீச்சர்,
''நான் வாறன் சாருமதி..நாளை சந்திப்போம்'' எனக்கூறி விடைபெற்றாள்.
சாருமதி படிப்பிக்கும் பாடசாலைக்கும் அவளின்வீட்டிற்கும் ஏறக்குறைய ஒரு கிலோமீற்றர் தூரமிருக்கும்.குறுக்குப்பாதையால்சென்றால் விரைவில் வீட்டையடைந்துவிடலாம் என்று எண்ணிய சாருமதி பிரதான வீதியிலிருந்து வலப்பக்கத்தால்பிரியும் பாதையூடாக நடந்து வயல்வெளிக்குள் இறங்கி விரைவாக நடக்கின்றாள்.
வயல்வெளி நூறுயார்தூரம்வரை நீண்டுகிடந்தது.
பலவருடங்களாக விவசாயம்செய்யாமல் தரிசுநிலமாக அந்தப்பூமி காட்சியளிக்கிறது.
வயல்களின் நடுப்பகுதியில் இருக்கும் கிணற்றில் சிலபெண்கள் குளித்துக் கொண்டிருந்தனர்.
அவர்கள் குளிக்கும்நீர் வெளியேறி கிணற்றினருகில் காணப்படும் பள்ளமான பகுதிகளில் தேங்கிநின்றது.
அந்தநீரில் கறவைப்பினங்கள் சில தாகசாந்திசெய்துகொண்டிருந்தன.
இவற்றையெல்லாம் கடந்து நடந்த சாருமதி நேரத்தைப்பார்த்தாள்.
கடிகாரம் மணி ஒன்றரையைக்காட்டியது.
பங்குனி மாதத்துவெய்யில் அவளின் அழகுமிக்க,மென்மையான மேனியைச் சுட்டதும் நடையைத் துரிதப்படுத்தினாள்.
சாருமதி அவளின் தாய் பார்வதியைப்போல நல்ல நிறம்.
தகதகவென்று தங்கச்சிலைபோல அழகாய் இருப்பாள்.கன்னங்குழிய அவள் சிரிப்பதைப்பார்த்தால் மீண்டும் ஒருமுறை சிரிக்கமாட்டாளா என்ற ஏக்கம் பார்ப்பவர்களைப்பற்றிக்கொள்ளும்.
வயது முப்பத்திரண்டை எட்டிவிட்டபோதிலும் அவளின்முகத்தில் எப்போதும் ஒரு தெய்வீக அழகு நிறைந்திருக்கும்.
சாருமதியின் குடும்பமும் ஒருகாலத்தில் ஓகோவென்று வாழ்ந்த குடும்பம்தான்.
சாருமதியின் அப்பா இராஜநாயகம் பிரபலவியாபாரியாக,பலவருடங்கள், பொரளையில் புடவைக்கடை வைத்திருந்தவர்.
எண்பத்துமூன்றாம் ஆண்டு ஜூலையில் வெடித்த இனக்கலவரத்தில் சிங்கள இனவாத அரசியல்வாதிகளினால் தூண்டப்பட்டு,தமிழ்மக்களின்

சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.உடைமைகள் பறிக்கப்பட்டன.
பலதமிழ்மக்கள் கொல்லப்பட்டனர்.அன்றைய திகதியில்
இராஜநாயகத்தின் புடவை மாளிகையும் தீக்கிரையாக்கப்பட்டது.
இராஜநாயகம் இடிந்துபோய்விட்டார்.
அப்பொழுது சாருமதி கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
பொருளாதாரம் இறுதியாண்டு படித்துக்கொண்டிருந்தாள்.
சாருமதி பட்டப்படிப்பு முடிக்கவுடன் அவளுக்கு வேலை
கிடைப்பதற்கும் தந்தையார் நோய்வாய்ப்பட்டு படுத்த
படுக்கையாவதற்கும் சரியாக இருந்தது.
குடும்பத்தில் சாருமதிதான் மூத்தபிள்ளை.
அவளுக்கு இரண்டுவயது இளையவன் சுரேஸ்.ஐந்தாண்டுகளுக்குமுன்
பட்டணத்தில் ஒருபெண்ணைக் காதல்திருமணம் செய்துகொண்டு குடும்பமாக
வாழ்கிறான்.
மூன்றாவதாகப்பிறந்தவள் மீனா.
நான்காண்டுகளுக்குமுன் புறோக்கர் வேலாயுதம் சாருமதிக்குச் சம்பந்தம்
ஒன்று பேசிவந்தார்.
குதூகலத்துடன் இராஜநாயகமும் பார்வதியும் பொருத்தம் பார்த்தனர்.
சாருமதியின் குறிப்பில் செவ்வாய்க் குற்றம்.
மாப்பிள்ளையின் குறிப்பில் குற்றமில்லை.
அதனால் குறிப்புக்கள் பொருந்தவில்லை.
வந்த சம்பந்தம் நல்ல இடமாக இருந்தபடியால் விடுவதற்கு மனமின்றி
மீனாவுக்குப் பொருத்தம் பார்த்தார்கள்.
பொருத்தம் நன்றாக இருந்தது.
திருமணத்தை உடன் முடித்துவிட்டனர் இராஜநாயகமும் பார்வதியும்

சாருமதி முச்சந்தியில் இருக்கும் அவளதுவீட்டை நெருங்கியபோது,
ஞானம்பாட்டி கூனிய முதுகுடன் தடியை நிலத்தில் ஊன்றியவாறு
எதிர்ப்பட்டு,
''என்ன பிள்ளை,இந்த வேகாதவெய்யிலில் ஒரு குடைகூட இல்லாமல்
நடந்து வருகிறாய்'' எனக்கேட்டாள்.
ஞானம்பாட்டி சாருமதியின் எதிர்வீட்டில் வசிக்கும் வயதான பெண்மணி.
சாருமதிமீது நல்ல அன்பும் மதிப்பும் அந்தப்பாட்டிக்கு உண்டு.
''வீட்டில் குடை இல்லையா?'' என திரும்பவும் பாட்டி கேட்க, ஏதோ
சிந்தனைவசப்பட்டு நடந்துவந்துகொண்டிருந்த சாருமதி திடுக்கிட்டு,
''இருக்கிறது பாட்டி...காலையில் தங்கை லலிதா யாழ்ப்பாணம் போக
வேண்டுமென்று சொன்னாள்...அதனால் குடையை அவளிடம் கொடுத்துவிட்டுப்
போய்விட்டேன்''என்றாள்.
வீட்டுக்கேற்றைத்திறந்துகொண்டு உள்ளேசென்ற சாருமதி,வெய்யிலில்
நடந்துவந்தமையாலும்,பசிமிகுதியாலும் சோர்வுற்றிருந்தபடியால்
வரவேற்பறைக்குள் சென்று சோபாவில் சாய்ந்தாள்.
மகள் வந்திருப்பதை அறிந்த பார்வதி வெள்ளி டம்ளரில் மோர்
எடுத்துவந்து,

www.tamilarangam.net

''சரியான வெய்யிலில் வந்திருக்கிறாய் குடியம்மா!''என்று கொடுத்தாள். டம்ளரைவாங்கி மடமடவென்று குடித்துமுடித்தாள் சாருமதி.
''சாப்பிட வாம்மா...காலையில் ஒருதுண்டுபாண்தானே சாப்பிட்டாய்? பசியாயிருக்குமே'' என்றாள் தாய்.
''காலையில் யாழ்ப்பாணம்போன லலிதா இன்னும் வரவில்லையாம்மா?'' என்றுகேட்டாள் சாருமதி.
''அவ போனவ தமக்கை மீனாவிடம் திருநெல்வேலிக்குப் போய்த்தானே வருவா.''என்றாள் பார்வதி.
''அப்பா சாப்பிட்டுவிட்டாரா'' என்றாள் சாருமதி.
''அவர் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறார்பிள்ளை'' என்று கூறினாள் பார்வதி.

சமையலறைக்குள் நுழைந்த சாருமதி தாயுடன்சேர்ந்து சாப்பிடத் தொடங்கினாள்.
அன்று வெள்ளிக்கிழமையாதலால்.வெண்டிக்காய்க்குழம்பும்.பருப்புக்கறியும் அப்பளப்பொரியலும் சமைத்திருந்தாள் தாய்.
''அம்மாவின் சமையலுக்குத் தனிருசி'' என நினைத்தவாறு அப்பளத்தைக் கடித்த சாருமதி தாயின் முகத்தைப்பார்த்துத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.சாப்பிட்டுக்கொண்டிருந்த தாயின் கண்களில் கண்ணீர்க்கோலங்கள்.
காலாகாலத்தில் திருமணம்செய்து புருஷனோடும் குழந்தைகளோடும் சந்தோசமாக வாழவேண்டியபருவத்தில் வாடியமலராய் குடும்பத்திற்காக உழைக்கும் தன் மூத்தமகளை எண்ணித் தினமும் கண்ணீர்வடிப்பாள் பார்வதி.
அவள் இதைத் தன் கணவரிடமும் சொல்வதுண்டு.
அவர்களுக்குத் திருமணமாகி இரண்டுவருடங்களாகப் பிள்ளைப்பாக்கியம் கிடைக்கவில்லை.அதன்பின் நயினாதீவு நாகபூஷணி அம்பாளுக்கு நேர்த்தி வைத்துத்தான் சாருமதி பிறந்தாள்.அதனால் இராஜநாயகமும் பார்வதியும் அவளைத்தங்களின் தவப்புதல்வியென்று கூறுவதுண்டு.
தாயின் கண்ணீரைப் பார்த்த சாருமதியின் கண்களிலும் கண்ணீர் திரையிட்டது.
வெளியில் யாரோ கதைக்கும் சத்தம்கேட்டதும் கண்ணீரைத் துடைத்து விட்டு திரும்பிப்பார்த்தனர்.
சாருமதியின் தங்கைகளான மீனாவும் லலிதாவும் சமையலறைக்குள் வந்துகொண்டிருந்தார்கள்.
இவர்களுக்கு அருகாமையில் வந்ததும்.
''யாழ்ப்பாணத்தில் சரியான பிரச்சனை...விமானத்தாக்குதலினால் பல கடைகள் இடிந்து நொறுங்கிவிட்டன...கஸ்தூரியார்வீதியில் நிறைமாதக் கர்ப்பிணிப்பெண்ணொருத்தி குண்டடிபட்டு அங்கேயே இறந்துவிட்டாள்.'' என்றுசொன்னாள் மீனா.
''நானும் எவ்வளவோ கஸ்டப்பட்டுத்தான் திருநெல்வேலிக்குப் போய்ச்சேர்ந்தேன். அங்கேபோனால் அக்காவும் இருபிள்ளைகளும் பதுங்குகுழியில் இருந்தார்கள்''

www.tamilarangam.net

என்றாள் லலிதா.
சாருமதியைப் பார்த்து,
''அக்கா...ஒரு முக்கியமான விடயமாகத்தான் நான் இப்போ வந்தனான்.''
என்றாள் மீனா.
சாருமதி ஒரு கேள்விக்குறியோடு தங்கையை நிமிர்ந்துபார்த்தாள்.
அதையுணர்ந்த மீனா,
''அக்கா...சென்றவாம் கொழும்புக்குப்போய் ஜெர்மனியில் இருக்கும் அவரோடு தொலைபேசியில் கதைத்தனான்....அவர் என்னையும் இருபிள்ளைகளையும் அங்குவரும்படி கூறியுள்ளார்...தான் இரண்டுலட்சம் ரூபாவரை அனுப்புவதாகவும் மிகுதியை யாரிடமாவது மாறிக்கொண்டுவரும்படியும் கூறினார்...இன்னும் இரண்டுலட்சம் வேணும்..நான் உன்னைத்தான் நம்பி வந்திருக்கிறன் அக்கா!'' என்றாள்.
சாருமதியும்,தாயும் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிச் சேமித்த பணம் ஒருலட்சம் தேறும்...மிகுதிப் பணத்திற்கு என்னசெய்வது என யோசித்தாள் சாருமதி.
திடீரென அவளது மூளையில் மின்னல் அடித்தது.
தனது நகைகள் யாவற்றையும் விற்றால் ஒரு லட்சம்வரை கிடைக்கும் எனக் கணக்குப்போட்டாள்.
''என்னக்கா யோசிக்கிறாய்..?''மீனா கேட்டாள்.
''ஒன்றுமில்லை மீனா...நாளை வா..பணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்.''
என்றுகூறிய சாருமதி சாப்பிட்ட கைகளைக் கழுவிக்கொண்டு வாரந்தாப் பக்கம் வருகின்றாள்.
அவளதுமனத்தில் தனது கடைசித்தங்கை லலிதாவைப்பற்றிய சிந்தனை எழுகிறது...
அவளுக்கும் இருபத்திரண்டு வயதாகிறது.இன்னும் இரண்டு ஆண்டுகளில்

கல்யாணத்திற்குத் தயாராகிவிடுவாளே...
அவளுக்கும் மீனாவின் கணவரைப்போன்று ஒரு நல்ல வரன் கிடைத்தால் முடித்துவிடவேண்டியதுதான் எனப் பலவாறு சிந்தித்தவண்ணம் வாரந்தாப் படிகளின்கீழே வரிசையாக நடப்பட்டுள்ள செவ்வரத்தைச் செடிகளைப் பார்க்கின்றாள் சாருமதி.
காலையில் அவள் பாடசாலை புறப்பட்டபோது அழகாகப்பூத்துச் சிரித்த அந்தப் பூக்கள் மாலை நெருங்கியதால் வனப்பிழந்து வாடியநிலையில் காட்சியளித்தன.
அந்த மலர்களையே வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டுநின்றாள் சாருமதி.

*

---

*அடுத்த இதழில் வில்லிசைக்கலைஞர் நாச்சிமார் கோயிலடி இராஜன் அவர்களின் பேட்டி வெளியாகிறது.*

---

www.tamilarangam.net

# தாய்மையடைந்த சகோதரிக்கு.....

பத்மினி பரம்.

தாய்மையடைந்திருக்கும் பெண்கள் எட்டாம் மாதத்திலிருந்து சில உடற்பயிற்சிகளைச் செய்துவந்தால், பிரசவம் இலகுவாக இருக்கும். இதற்கென இங்கு பல வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இப் பயிற்சி வகுப்புக்களிலிருந்து திரட்டப்பட்ட சில உபயோகமானகுறிப்புக்கள் இங்கு தரப்படுகின்றன.

1) நாற்காலியின் பின்புறமாகப் பார்த்துக்கொண்டு,இரு கால்களையும் நாற்காலியின் இருபக்கங்களிலும் அகலவைத்து,இரு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து மடித்து நாற்காலியின் முதுகின்மேலேவைத்து நாடியை அதன்மேலே வைத்துக்கொண்டு இருத்தல்வேண்டும்.
2) கூடியளவு தரையிலே சப்பாணிகொட்டியிருத்தல்வேண்டும்.
3) இரு முழங்கால்களையும்,இரு உள்ளங்கைகளையும் தரையிலே ஊன்றிக்கொண்டு இடைப்பகுதியை நன்கு முன்னும் பின்னும் ஆறுதலாக அசைக்கவேண்டும்.
4) முடிந்தால் துவிச்சக்கரவண்டியும் ஓட்டலாம்.
5) தரையிலே நிமிர்ந்து படுத்துக்கொண்டு,தலையை ஓர் தலையணையின் மேலே வைத்துக்கொண்டு இருமுழங்கால்களை 45° அளவில் மடித்து வைத்துக்கொண்டு இரு கைகளையும் தலைக்குக்கீழேவைத்துத் தலையை முன்னோக்கி அசைக்கவேண்டும்.தலையைமுன்னே தூக்கிக் கொண்டிருக்கும் நிலையில் இரு மேல்கால்கள் பகுதிகளையும் விரித்து முடிந்த அளவு வயிற்றுப்பக்கமாக மடிக்கவேண்டும்.பின் கால்களைமேலே உயர்த்தி,பதித்து பயிற்சிசெய்யவேண்டும்.2, 3 தடவைகள் செய்தபின் கால்களை 45° க்கு நிலத்தில் ஊன்றி கால்களை அசைத்து தசைப்பகுதிக்கு ஓய்வுகொடுக்கவேண்டும்.
இவ்வாறுசெய்வதால் பிரசவத்தின்போது விரிவடையவேண்டிய எலும்பு,தசைப்பகுதிகள் அசைவுறுகின்றன.

www.tamilarangam.net

6) பஞ்வான சோபாக்களில் இருக்கும்போது சிறிய இரு தலையணைகளை இடுப்பின் இரு பக்கங்களிலும்வைத்து சொகுசாகச்சாய்ந்துகொண்டு கால்களை இருக்கையின் உயரத்திலும்பார்க்க சிறிதுமேலே (சோபா,மேசைச்சட்டம்போன்றவற்றில்) வைத்துக்கொண்டு இருத்தல்வேண்டும் கூடியளவு கால்களை நிலத்தில் தொங்கவிட்டு உட்கார்வதைக் குறைக்கவும்.இவ்வாறு செய்வதால் இடுப்புவலி,கால்வீக்கம், கால் தசையுள்ள இடங்களில் ஏற்படும் வலிபோன்றவற்றைக்குறைக்கலாம்.

7) தூங்கும்போது,தலையை உயரமான தலையணையின்மேலேவைத்து, குழாய்போன்ற தலையணையை இரு முழங்கால்களின் கீழ் வைத்துக்கொண்( படுப்பது நலம்.தலையை உயரமான தலையணையின்மேல் வைப்பதால் நெஞ்செரிவு ஏற்படுவதைத்தடுக்கலாம்.

8) இடுப்புவலி:
பிரசவத்தை அண்மிக்கும் காலத்தில் இடுப்புவலி ஏற்படுவது சகஜம்.இந்த சமயங்களில் **கணவன்** அல்லது வேறொருவரின் உதவியுடன்,இடுப்பின் கீழ்ப்பகுதிகளில் உள்ளங்கைகளால் சிறிய வட்டங்கள்போல் அழுத்தித்தேய்க்கவேண்டும்.இவ்வாறுசெய்வதால் இடுப்புவலி குறையும்.பிரசவத்தின்போது ஏற்படும் இடுப்புவலிக்கும் இதுவே பயிற்சியாகும்.

குறிப்பு:

**இப்பயிற்சிகளை எட்டாம் மாதம் ஆரம்பித்து ஒவ்வொருநாளும் செய்துவரவேண்டும். பிரசவநேரத்தில்கூட இதனைச்செய்யும்படி சொல்லப்படுகிறது.**
**பயிற்சிகள் செய்யும்போது உட்சுவாசம் மூக்காலும், வெளிச்சுவாசம் வாயாலும் செய்யவேண்டும்.**
**அடிக்கடி விரைவான சுவாசம்**
**சிறிது மூச்சடக்கி மீண்டும் விரைவான சுவாசம் செய்வது பிரசவத்தின்போது முக்கிய அம்சம் என்று சொல்லப்படுகிறது.**

அடுத்து கர்ப்பவதிகளின் உணவிலே எல்லாவிதமானசத்துக்களும் அடங்கியிருக்கவேண்டும்.இல்லையேல் கூடுதலான மருந்துவகைகள், ஊசிமூலம் மருந்து போன்றவகைகளில் சத்துக்களை உட்செலுத்த வேண்டி ஏற்படுகிறது.இதனைக்குறைப்பதற்கு ஆரம்பகாலத்தில் இருந்தே சுவையைமட்டும் கவனிக்காமல் சத்துணவுகளை உட்கொள்வது அத்தியாவசியம்.

1) மாக்கறி,பழவகை,தயிர்,கீரை,சலாது போன்றவற்றை உணவிலே சேர்த்துக்கொண்டால் மலச்சிக்கலைத்தடுக்கலாம்.

www.tamilarangam.net

3) கூடிய அளவு எண்ணெய்சேர்த்த உணவுவகைகளைக் குறைவாக உண்பதால் பித்தவாந்தியைக் குறைக்கலாம்.
(கொழுப்பு சமிபாடடைய பித்தம்கூடியளவு சுரக்கப்படுவதாலும் சிலருக்கு வாந்தி ஏற்படுகிறது.)

உணவிலுள்ள சத்துக்கள் பின்வருமாறு:

உயிர்ச்சத்து A :பால்,தாவர எண்ணெய்,வெண்ணெய்,ஈரல்.
உயிர்ச்சத்து D :கடல்மீன்,பால்,பாலினால் செய்யப்பட்ட பொருட்கள்,முட்டை
உயிர்ச்சத்து E :கோதுமை,சோளவிதை எண்ணெய்,பருப்புவகை.
உயிர்ச்சத்து K :கோவாவகை,சோயா,கீரை,தக்காளி,உருளைக்கிழங்கு, கோதுமை,முட்டை,ஈரல்,சிறுநீரகம்.
உயிர்ச்சத்து C :பழவகை,மரக்கறி,எலுமிச்சை,தோடைவகைகள், பெரிய நிறமிளகாய்கள்,பெற்றசீலிய,ஸ்ரோபரி பழம். கோவாவகை,உருளைக்கிழங்கு.
உயிர்ச்சத்து B1 :தானியவகை,பருப்புவகைகள்.

---

பூவாசைத்தொடர்ந்துபெற விரும்பும் வாசகர்கள்

இந்த விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து அனுப்பக்கோருகிறோம்.

பூவரசு
இனிய தமிழ் ஏடு.

வாசகர் பெயர்:....................................................

முகவரி:....................................................
....................................................
....................................................
....................................................
....................................................

பூவரசு இனிய தமிழ் ஏட்டைத்தொடர்ந்துபெற விரும்புகிறேன்.
அதன் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில்
எனது அன்பளிப்பாக ஒரு வருடச்சந்தாவை இத்துடன்
(காசுக்கட்டளையாக/காசோலையாக) இணைத்துள்ளேன்.

..................
(திகதி) ..................

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்ச் மாதம் 25 ம் திகதி நடைபெற்ற கிரிக்கட் உலகக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற்றுள்ளது. இங்கிலாந்துடன் மோதிய பாகிஸ்தான் 22 ஓட்டங்களால் பெற்றவெற்றி பாகிஸ்தான் கப்டன் இம்ரான்கானின் தனிப்பட்ட வெற்றியாகவும் கருதப்படுகிறது. 1987 ம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் உலகக்கிண்ணத்தைவெற்றிகொண்ட அவுஸ்திரேலியாவே இம்முறையும் வெற்றிபெறும் என போட்டிகள் ஆரம்பமாகுமுன் கருதப்பட்டபோதும், அரையிறுதிப்போட்டிகளில் பங்குபற்றும் அளவுதானும் அவுஸ்திரேலியா வெற்றிபெறாதது அனைவருக்கும் அதிர்ச்சியே. அதேபோன்று நியூசிலாந்து தொடர்ச்சியாக 7 போட்டிகளில் வெற்றிபெற்றுவந்து அரையிறுதிப்போட்டியில் தோற்றுப்போனதும் ஒருவித ஏமாற்றமே.
9 நாடுகள் கலந்துகொண்ட இப்போட்டிகளின் இறுதிநிலை வருமாறு:

| நாடுகள் | விளையாடியது | வெற்றி | தோல்வி | முடிவு இல்லை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| நியூசிலாந்து | 8 | 7 | 1 | - | 14 |
| இங்கிலாந்து | 8 | 5 | 2 | 1 | 11 |
| தென் ஆபிரிக்கா | 8 | 5 | 3 | - | 10 |
| பாகிஸ்தான் | 8 | 4 | 3 | 1 | 9 |
| அவுஸ்திரேலியா | 8 | 4 | 4 | - | 8 |
| மே.இந்திய தீவுகள் | 8 | 4 | 4 | - | 8 |
| இந்தியா | 8 | 2 | 5 | 1 | 5 |
| இலங்கை | 8 | 2 | 5 | 1 | 5 |
| சிம்பாப்வே | 8 | 1 | 7 | - | 2 |

பிறேமனில் தமிழ்க்கலாமன்றம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் கலைஞர்கள் சிலர் ஈடுபட்டுள்ளார்கள். பிறேமனில் வாழ்கின்ற அனைத்துக்கலைஞர்களினது ஆதரவும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.
ஆர்வமுள்ளவர்கள் மே 15 ம் திகதிக்குமுன்னர் கடிதமூலம் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பிறேமன்வாழ் தமிழ்க்கலைஞர்களுக்கு!

www.tamilarangam.net

ஓட்டங்களின் விகித அடிப்படையில் 5 ம் 6 ம் இடங்களும்
7 ம் 8 ம் இடங்களும் தீர்மானிக்கப்பட்டன.
அரை இறுதிப்போட்டிகளில் முதல்நான்கு அணிகளும் சந்தித்தன.
நியூசிலாந்து பாகிஸ்தானுடனும்,தென் ஆப்பிரிக்கா இங்கிலாந்துடனும்
மோதியதில் முறையே பாகிஸ்தானும் இங்கிலாந்தும் வெற்றிபெற்றன.

1. நியூசிலாந்து 7 விக்கட் இழப்பிற்கு 262 ஓட்டங்கள்.
   பாகிஸ்தான் 6 விக்கட் இழப்பிற்கு 264 ஓட்டங்கள்.

2. இங்கிலாந்து 6 விக்கட் இழப்பிற்கு 252 ஓட்டங்கல்.
   தென் ஆப்பிரிக்கா 6 விக்கட் இழப்பிற்கு 232 ஓட்டங்கள்

இறுதிப்போட்டி முடிவுகள்:
பாகிஸ்தான் 6 விக்கட் இழப்பிற்கு 249 ஓட்டங்கள்.
இங்கிலாந்து 227 ஓட்டங்கள்.



# விளையாட்டு

(கிரிக்கட்)

## முகவரி:

T.RAJU
CARL HURTZIG STR-7
2800 BREMEN 66.

www.tamilarangam.net

# தமிழ்நாட்டைச் சுற்றினோம்.

*சிங்களம் புட்பகம் சாவகமாகிய*
*தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு*
*தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று*
*சால்புறக்கண்டவர் தாய்நாடு.*
*(செந்தமிழ்)*
— மகாகவி பாரதியார்.

(முன் இதழ்களின் சுருக்கம்:
முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்டு
ஒன்றரை மாதங்களின்பின் தமிழ்நாட்டைச் சுற்றப்புறப்பட்டோம்.
அந்தநேரத்தில் எமக்குப் பல சோதனைகள் ஏற்பட்டன.
பிரச்சனைகளுக்கு மத்தியில் கேள்விக்குறியோடு ஜேர்மனியிலிருந்து
புறப்பட்டோம்.சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் ஏற்பட்ட
அனுபவங்களே தனி. அந்த அனுபவங்களின் தொடர்ச்சியை இங்கே
தொடருங்கள்.)

சென்னை விமான நிலையத்தைவிட்டு இன்னும் நாம் வெளியே
போகவில்லை.
பெட்டிகளுக்கு காவலாக மகன்மார் இருவரும் நின்றனர்.
நண்பர் வைரவன் டாக்ஸி ஒன்றைத்தேடிப்போனார்.
நானும் மனைவியும் மீண்டும் விமான நிலையத்தினுள் சென்றோம்.
உள்ளே—
இந்தியப்பணம் மாற்றிக்கொள்வதற்காக வங்கியைத்தேடினோம்.
சர்வதேச விமானநிலையம் ஒன்றில் வங்கியொன்று எப்போதும் திறந்திருப்பது
வழக்கம்.
வெளிநாட்டுப்பிரயாணிகளின் வசதிக்காகவே இந்த ஏற்பாடு.
ஆனால் இங்கு...?

— வி.ஆர். வரதராஜா.

நாங்கள் உள்ளே சென்றதும் முதலில் ஒரு தபால்நிலையம் தென்பட்டது.
அங்கு இரண்டு அலுவலர்கள் அமர்ந்திருந்தனர்.
''வெளிநாட்டுப்பணம் மாற்றவேண்டும்..வங்கி எங்கே இருக்கிறதென்று கூறமுடியுமா'?
இப்படி நான் ஆங்கிலத்தில் கேட்டதும் ஒருவர் தலையைச்சொறிந்தார்.
அவர் மற்றவரின் முகத்தைப்பார்த்தார்.
இருவர்முகத்திலும் ஒருவிதமான சலிப்பு!
''எங்கே வங்கியிருக்கின்றது'?''
–ஒருவர் மற்றவரிடம் கேட்டார்.
அவர் எமக்கு இடது புறமாகக் கையைக்காட்டினார்.
வார்த்தைகள் வெளிவரவில்லை.
பெரும் வியப்புடன் நாம் அவர்களைப்பார்த்தோம்.
சர்வதேசவிமானநிலையம் ஒன்றில் கடமையாற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்.
ஆனால்,
அவருக்கு அங்குள்ள வங்கி எங்கே இருக்கிறதென்று தெரியவில்லை!
வியப்படையாமல் இருக்க முடியுமா என்ன'?
நாம் அவர்காட்டிய பகுதிக்குச்சென்றோம்..அங்கும் எமக்கு வியப்புக்காத்திருந்தது.
வங்கியில் இரண்டு அதிகாரிகள் இருந்தனர்
100 டொச்ச மார்க்கை எடுத்து அவர்கள்முன் வைத்தேன்.
''இதைமாற்றி இந்தியப்பணம் தாருங்கள்''என்று ஆங்கிலத்திலேயே கூறினேன்.
''எங்கள் வேலைநேரம் முடிந்துவிட்டது.அதனால் இதை நாம் மாற்றிக் கொடுக்கமுடியாது.மேலே ஒரு வங்கி திறந்திருக்கும்..அங்கே போங்கள்!''
இப்படி அந்த அதிகாரி கூறியதும் நாம் மேலும் வியப்படைந்தோம்.
நான் சிறிது நிதானமாகச் சிந்தித்தேன்.
விமானநிலையத்தினுள்ளே பணம் மாற்றுவதற்கு என் இவ்வளவு சிரமம்'?

வெளியில் பணம் மாற்றிக்கொடுப்பவருக்கு உதவி செய்கிறார்கள்போலும்!
பிரயாணிகளை அங்குமிங்கும் போகுமாறு சிரமப்படுத்தினால் அவர்கள் என்ன செய்வார்கள்'?
வெளியிலிருப்பவரைத்தானே நாடுவார்கள்!
எனவே நமது நிலையும் அதுதான்!
நாங்கள் உள்ளேயிருந்து வெளியில் வந்தோம்.
அப்போது–
''சார்...நானும் வெளிநாட்டுப்பணம் மாற்றிக்கொடுக்க உத்தரவு பெற்றவன்தான் என்னிடம் கொடுங்கள்''என்றார் வெளியில் நின்றவர்.
நான் அவர்சொல்வதைக் காதில்வாங்கிக்கொள்ளவில்லை.
நண்பரைத்தேடினேன்.
அவர் டாக்ஸியுடன் காத்திருந்தார்.மிகப்பழைய டாக்ஸி.
பெட்டிகளைப் பெரும்சிரமத்திற்குமத்தியில் டாக்ஸியில் ஏற்றினோம்.
''அங்கே நிற்பவரிடம் சிறிதளவு பணத்தைமாற்றினால் நல்லதல்லவா...
உங்களுக்கு செலவுக்கும் இந்தியப்பணம் தேவைதானே!''
இப்படி காரில் ஏறுவதற்கு முன்பு நண்பர் ஞாபகப்படுத்தினார்.
நான் சம்மதம்தெரிவித்தேன்.

www.tamilarangam.net

பணம் மாற்றுபவரும் தூரத்திலிருந்து எங்களையே பார்த்துக்கொண்டிருந்தார்.
என் நண்பர் கைகாட்டி அழைத்ததும் ஓடோடிவந்தார்.
நூறு டொச்சமார்க்கைக்கொடுத்து மாற்றித்தருமாறுகேட்டேன்.
அவர் ஆயிரக்கணக்கில் எதிர்பார்த்து வந்திருக்கவேண்டும்.அதனால்-
நூறு டி.எம்..அவருக்குச் சிறிது ஏமாற்றத்தைக்கொடுத்தது.அதை அவர்முகம்
படம்பிடித்துக்காட்டியது.
வங்கியைவிட சிறிது அதிகமாகவே கொடுத்தார்.
அடுத்து-
டாக்ஸி சென்னை விமானநிலையத்தைவிட்டுப் புறப்பட்டது.
இது புதிதாகக்கட்டப்பட்டவிமானநிலையம்.
இதற்கு இந்தியாவின் மூத்ததலைவர்களான அண்ணா,காமராஜர்
ஆகியோரின் பெயர்களை வைத்துள்ளார்கள்.
டாக்ஸி சென்னைநகரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.
விமான நிலையத்திலிருந்து சிறிது தூரம்சென்றதும்,நண்பர்-
''அதோ தெரிகின்றதே..அதுதான் எமது பழைய விமானநிலையம்''என்று
குறிப்பிட்டார்.
புதிய விமானநிலையத்தைவிட அது சிறிது வசதி குறைவாகத்
தென்பட்டது.
அங்கும் பொலிஸார் முன்புறத்தில் காவலிருந்தனர்.
''இங்கு இப்போது பாவனையே இல்லையா?''என்று நண்பரிடம் கேட்டேன்.
''விமானநிலையத்தார் இதனை வேறு அலுவல்களுக்காகப் பாவிக்கிறார்கள்
அதனால் இப்பகுதியும் தமிழ்நாட்டின் பாதுகாப்புப் பிரதேசங்களுள்
ஒன்று''என்றார்.

டாக்ஸி ஓடிக்கொண்டிருந்தது.
சனநெருக்கடிமிக்க பகுதியைத் தேடிக்கொண்டிருந்தேன்.
டாக்ஸி சைதாப்பேட்டையை நெருங்கியதும் எனக்குத் தலையைச்சுற்றியது.
''சிவ சிவா!''என்றவாறு தலையைப்பிடித்துக்கொண்டேன்.
என் ஆசனத்தில் அமர்ந்திருந்த நண்பர் வைாவன் விரைந்து திரும்பினார்.
''என்ன..என்ன..?'' அவசரமாகக்கேட்டார்.
''தலையைச்சுற்றுகிறது!''என்றேன்.
''பிரயாணக்களைப்பாக இருக்கும்''
''இல்லை..இல்லை..உங்கள் வீதியின் போக்குவரத்தைப் பார்த்ததும் அவ்வாறு
ஏற்பட்டது.''
இவ்வாறு நான் கூறியதும் நண்பர் பலமாகச்சிரித்தார்.
டாக்ஸிடிரைவரும் அதில் கலந்துகொண்டார்.
ஆனால்,என்னோடு உரசிக்கொண்டிருந்த என்னில் பாதி..என் மனைவி செல்லமாக
என்முதுகில் ஒரு கிள்ளல்....
''இங்கேயும் அறுக்கத்தொடங்கிவிட்டீர்களா...?''
சில நகைச்சுவை விசயங்களை நான் சீரியசாகச்சொல்வேன்.
அது நகைச்சுவை என்பதையறிய கேட்பவர்களுக்குச் சிலநிமிடங்கள்பிடிக்கும்.
பின்பு விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

இதனை என்மனைவி ''அறுவைப் பகிடி''என வர்ணிப்பதுண்டு.
இவ்வாறு நான் கதைத்ததும் ''அறுக்காதீர்கள்!''என்று இடைமறிப்பதுண்டு.
அந்த அறுவைதான் சைதாப்பேட்டையிலும் நடந்தது.

கார்கள் ஒருபக்கம்...பஸ்கள்,லாரிகள் ஒருபக்கம்..
மாட்டு வண்டிகள் மற்றொருபக்கம்.
இதற்கிடையில்—
எங்கே சிறிய இடம் கிடைக்கிறதோ அங்கேயெல்லாம் நுழைந்து
சென்றுகொண்டிருக்கும் ஆட்டோ டாக்ஸிகள்..
இடையில் புகுந்து விளையாடும் சைக்கிள்கள்...
இத்தனை போக்குவரத்து நெரிசல்களைப்பற்றியும் அக்கறைகாட்டாத மக்கள்.
பாதைகளில் மக்கள் நடமாடாத நேரமே இல்லை!
இவை மாத்திரமா?
மாடுகள் நடக்கின்றன...பாதையோரங்களில் அங்காடி வியாபாரிகள்.
அந்தந்த இடங்களில் அசுத்த நீர்த்தேக்கங்கள்.
அவற்றைச்சுற்றி ஈக்களும்,நுளம்புகளும்,புழுக்களும்....!
இத்தனை நெரிசல்களுக்கு மத்தியில் எம்மைச்சுமந்த டாக்ஸி மெதுவாக
நகர்ந்துகொண்டிருந்தது.
ஒழுங்காகப் போய்ச்சேர்ந்துவிடுவோமா என்ற சந்தேகமும் என்னுள்
எழாமலில்லை.
ஏனெனில்—
வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளுக்குப் பெயர்பெற்றது ஜேர்மனி,உலகில்
பலநாடுகள் இதற்காக ஜேர்மனியை மனம் விட்டுப் பாராட்டியுள்ளன.
இங்கிருந்து அங்கு சென்று ஒழுங்கற்ற வீதிப்போக்குவரத்துக்களைப்
பார்த்ததும் எப்படியிருக்கும்?
''தயவு செய்து வீதிப்போக்குவரத்து விதிகளை அவதானியுங்கள்!''
—இவ்வாறுகோரும் அறிவிப்புக்கள் சிவப்பு எழுத்துக்களில் சென்னை வீதிகளில்
காணப்படுகின்றன..ஆனால்—
அந்த அறிவிப்புக்களை அவதானிப்பவர்களே இல்லை.
இந்த நிலையில் வீதி ஒழுங்குகளை கடைப்பிடிப்பது யார்?
வீடு ஒழுங்காக இருந்தால் வீதியும் ஒழுங்காக இருக்கும்..ஆனால்—
வீடு திருந்தாததற்கு வீதியின்மீது பழியைப்போடுகிறார்கள்.
''அங்கே அந்த பேருந்தில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரத்தைப்பார்த்தீரா?''
—நண்பர் லைவன் இவ்வாறு கேட்டதும் சிந்தனையிலிருந்து விடுபட்டு எதிரே
அவதானித்தேன்.
சிவப்பு விளக்கு எரிந்துகொண்டிருந்தது.
அதனால் வாகனங்கள் பச்சைவிளக்குக்காகக் காத்துக்கொண்டிருந்தன.
நாம் பிரயாணம் செய்த டாக்ஸிக்கு எதிரே பஸ் நின்றது.
அதிலிருந்த விளம்பரம் ஆவலைத்தூண்டியது.
''கொலைகாரன் ஒற்றைக்கண் சிவராசனைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு
அல்லது அவனைப்பற்றிய தகவல்கொடுப்பவருக்கு 10 லட்சம் ரூபா பரிசு.''
''கொலைகாரி சுபாவைப்பிடித்துக்கொடுப்பவர்களுக்கு அல்லது அவளைப்பற்றிய

www.tamilarangam.net

தகவல் தருபவர்களுக்கு 5 லட்சம் ரூபா பரிசு.''
விளம்பரத்தின் ஏனைய விபரங்களை நான் வாசிக்கவில்லை..
அவை தெரிந்த விபரங்கள் என்பதனால் விட்டுவிட்டேன்.
இதைப்பற்றி நான் கதைக்க வாயைத்திறந்தபோது–
எதுவும் கதைக்கவேண்டாம்! என நண்பர் சைகைமூலம் தெரிவித்தார்.
டாக்ஸி சாரதி இருப்பதனால் அவதானம் என்பது அதன்பொருள்.
இந்தியாவின் மத்திய புலனாய்வுத்துறை பொலிஸார் தமிழ்நாட்டில்
பரவலாக இருந்தனர்.
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விசாரணைக்காக இவர்கள்
பல மாறுவேடங்களில் சுற்றிக்கொண்டிருக்கின்றனர்.
சிலவேளை எங்கள் டாக்ஸிசாரதியும் ஒரு சி.பி.ஐ. பொலிஸாக இருந்தால்...?
''இப்போது நாங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?'' என்று
நண்பரைக்கேட்டேன்.
''ஹோட்டல் இம்பாலாவில் உங்களுக்கொரு பமிலி ரூம் ஏற்பாடு செய்துள்ளேன்..
அங்குதான் போய்க்கொண்டிருக்கிறோம்''
நண்பரின் வீடு வசதியாக இருந்தது.
அங்கேயே இருக்கலாம் என்று அவர் அபிப்பிராயப்பட்டார்.ஆனால்,
ஹோட்டலில் தங்குவதுதான் நல்லதென ஏற்கெனவே அவரிடம் நான்
கூறிவிட்டேன்.
பிள்ளைகள் இங்கு வாழ்ந்து பழகிவிட்டார்கள்.அந்த வசதிகள்
அங்கு தரமான ஹோட்டல்களில்தானே கிடைக்கும்.
ஆயிற்று!
ஹோட்டலுக்கு வந்துவிட்டோம்.தங்கும் இடம் வசதியாக இருந்தது.
இரண்டு அறைகளைக்கொண்டசிறிய வீடுபோல் இருந்தது.முக்கியமாக
குளிர்சாதனம் பொருத்தப்பட்டிருந்தது.
வெய்யிலுக்குப் பெயர்பெற்றது சென்னை.
கொழுத்திய வெய்யிலில் குளித்து வியர்வையால் உடல் நனைந்துவிட்டது.
ஹோட்டல் அறையில் குளிர்சாதனப்பெட்டி வழங்கிய செயற்கைக்குளிர்
கொஞ்சம் இதமாக இருந்தது.
ஆனால்,பிள்ளைகளுக்கு அதுவும் போதாது என்று காற்றாடிகளையும்
பறக்கவிட்டனர்.
அடுத்து–
தமிழ்நாட்டுநிலைமைகளை நண்பர் எடுத்துக்கூறினார்.
அவர் கூறிய தகவல்களை உன்னிப்பாகக்கேட்டோம்.
அந்தத் தகவல்கள் எமக்குச்சிறிது அச்சத்தையும் ஏற்படுத்தின.
இவ்வளவு பிரச்சனைக்குள் நாம் எப்படி தமிழ்நாட்டைச்சுற்றப்போகின்றோம்?
ஒற்றைக்கண் சிவராசனையும்,சுபாவையும் தேடும் கண்களில் நாம்
தட்டுப்பட்டால்?

(அடுத்த இதழில் தொடரும்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பூவரசு ஓராண்டு நிறைவுக் கலை, இலக்கிய விழாவில் இடம்பெற்ற கவிதைகளிலிருந்து........

"
...............
கவிதை என்றால் என்ன?
கன்னித்தமிழெடுத்து
காலமெனும் நார்தொடுத்து
உன்னி நெஞ்சில் எழும்
உயிர்த்துடிப்பைத் தான்வடித்து
வண்ணக்களஞ்சியமாய்
வாடாத மாலையதாய்
எண்ணக்கருத்துக்களை
இசைப்பதுவே கவிதையாகும்!

கத்திப்பாடுவது மட்டுமல்ல
பிழைகளைக்
குத்திக்காட்டுவதும்
கவிஞன் வேலைதான்

கத்தியின்றி ரத்தமின்றி
கையிலுள்ளபேனாவால்
சத்தியத்தின் பாதையினைச்
சரியாகக் காட்டுபவனே
கவிஞனாவான்.
...................

................
பொன்னுக்கும் பொருளுக்கும்
வெறும்போற்றுதலுக்கும்

கண்ணுக்குத்தெரிகின்ற உங்கள்
கைத் தட்டுதற்குமட்டும்
நாங்கள் இங்கு
கவிதைசொல்லவரவில்லை
புண்ணுக்குப் புனுகு தடவும்
தொழிலல்ல நமது வேலை

புலி வாழும் மாந்தரெல்லாம்
புதுப்பாதைதனைக்கண்டு
வளமாகத்தான்வாழ
பாதை இது பயணம் இது
பகுத்தறிவின்வேலை இது எனப்
பாட்டினிலே காட்டுவது
எமது கடன்

கேட்டவற்றைச்சிந்தித்து
கேடுகளைக்களைந்தெறிந்து
ஏற்றவற்றைத் தேர்ந்தெடுத்து
ஏற்றமிகு செயல்புரிதல்
உங்கள் கடன். "
....................

–கவிஞர் தமிழ்மாறன்.

புதுயுகம்
நோக்கி
இனிப் புறப்படுவோம்
வாருங்கள்!

"
............................
..........................
உயிர்குடிக்கும் ஓநாயின்
ஊளையது நம் மண்ணில்
விடிவுமில்லை ஒளியுமில்லை
ஆனால் தினந்தோறும்
அஸ்தமனம்
கொஞ்சமேனும் எங்களைநாம்
கூறுபோட்டுப்பார்த்திடுவோம்.

இன்றுவரைபட்டதுன்பம்
என்றைக்கும் இனிவேண்டாம்
கொன்றுதின்னும் கொடுங்கோலன்
குடியாட்சிமுறைவேண்டாம்

தொன்றுதொட்டு ஆண்ட இனம்
அடங்குவதா அதுவேண்டாம்
மனம் படைத்த மனிதர்கள் நாம்
மறம்படைத்த தமிழர்கள் நாம்
உரம்நிறைந்த தோள்கள்கொண்ட
உணர்வுநிறை நண்பர்கள் நாம்
ஒன்றுபட்டு ஒற்றுமையாய்
ஓரணியாய்ப்படையெடுப்போம்
அன்றிழந்த உரிமைகளை
அணிதிரண்டு மீட்டெடுப்போம்
சென்றுவந்ததிசையெல்லாம்
செந்தமிழால் கவிதொடுப்போம்
............... "

–க.திருநாதன்.

(சுவிஸ்)

www.tamilarangam.net

"
....இந்நாடு தன்பேரைத்
''தந்தைநாடு'' எனச்சொல்லும்
நம்நாட்டை நாமெல்லாம்
''தாய்நாடு'' என்கின்றோம்.
பெண்ணென்றால் நம்மினத்தில் பெருமதிப்பு
ஆனாலும்—
பெண்பிறந்தால் பெற்றவளும்
பெரிதாய் மகிழ்ந்ததில்லை.

ஏன் இந்த மாற்றெண்ணம்..?
இதிலென்ன பேதமையோ?

ஆணோடு பெண்ணுக்கும்
சம உரிமைவேண்டுமென்று
முந்நாளில் எத்தனைபேர்
முன்னுரைத்துப்போனார்கள்
ஆனாலும் ஆனதென்ன..
அவரவர்கள் தம்பாட்டில்..
காலங்கள் மாறிடினும்
கருத்தினிலே மாற்றமில்லை
இன்னும் அதேபாட்டை
எங்கும் நாம் கேட்கின்றோம்.

''சம உரிமை தாருங்கள்'' என்கின்றோம்
யாருக்கு? பெண்ணுக்கு!
பெண்ணுரிமை ஆர் பறித்தார்..
ஆண்மகனா..இல்லை இல்லை
பெண்ணுரிமை பறித்ததெல்லாம்
பெண்களேதான்.
நமக்கென்று பலவிலங்கை
நாம்தானே போட்டுவைத்தோம்.
சீதனம் வேண்டுமா வேண்டாமா
என்றெல்லாம்
தர்க்கங்கள் போடுகிறார்
குதர்க்கங்கள் பேசுகிறார்.
சீதனத்தைக் கேட்டதுயார்?
ஆண்மகனா..
அவன் அம்மா!
தாய்சொல்லைத்தட்டாத
பிள்ளைகள்தான் தமிழினமே..
ஆண்வர்க்கம் அம்மாவின்
சொல்லை என்றும் தட்டாது.
அதனால்தான்—
சீதனத்தைக்கேட்டுத்
திருமணத்தைத் தள்ளிவைக்கும்.
தானும் ஓர் பெண்ணென்று
அவன்தாய் உணர்ந்திருந்தால்
சீதனத்தைக் கேட்பாளா?
தெருவெங்கும் பறைசாற்றி
தான்பெற்றமகனுக்கு
விலை ஒன்று சொல்வாளா?

—இது ஓர் உதாரணமே!
இப்படித்தான் நம்மிடையே—
நம்மை அறியாத
பலகுறைகள் குடிகொள்ளும்.
அந்தக்குறைகளை நாம்
அறிந்து களைந்திட்டால்—
எங்கள் சமுதாயம்
எப்போதும் புதுயுகத்தில்.
................ "

—திருமதி: கௌரி கணா.

"
.......................
ஒரு பொழுது இரவு வரும்
மறுபொழுது பகல்விடியும்
மறுபடியும் இரவுவரும்
இரவின்பின் பகல்விடியும்
இப்படித்தான் இயற்கை
இதுபோல்தான் நம்வாழ்வும்.

இன்பத்தைக்கண்டு
சிரித்து மகிழ்ந்திருப்போம்
இடையினிலே ஒரு துயரம்
இடிபோல வந்திறங்கும்
அழுதவிழி மூடுமுன்பே
அடுத்தங்கே மகிழ்வுவரும்
இதுவே நியதி எனில்
இதைமாற்ற எவருமில்லை.

மனிதனவன் விலங்குகள்போல்
ஒருகாலம் வாழ்ந்திருந்தான்
ஆதிமனிதன் அவன்
அவனிடத்தில் பகைமை இல்லை
பேதமைகள் இல்லை
பித்தலாட்டம் ஏதுமில்லை
இன்றைக்கு மனிதரெல்லாம்
எப்படியோ மாறிவிட்டார்
சண்டைக்கு முந்துகிறார்
தர்மமெல்லாம் மறந்துவிட்டார்
இந்தநிலை மாறுதற்கு
ஏதேனும் செய்வதெனில்
இன்றிருக்கும் யுகம் மாறி
புது யுகம்தான் வரவேண்டும்.

மனிதரை மனிதரே
மனிதராய் ஏற்பதுதான்
புதிய யுகமெனச்சொல்வேன்
புதிய யுகம்வேறேது!
இந்தக்கலியுகத்தில்
இப்போது நாம் காணும்

www.tamilarangam.net

..................

பால் அபிஷேகம்செய்து
பக்திகொண்டு
பண்போடு தாய்மண்ணுக்கு
வண்ணக் கோலமிட்டு
ஊரெல்லாம் கூடிநின்று
பொங்கலிட்டு
உள்ளம் இனிக்கின்ற
பொங்கல் உண்டு
ஊர்கூடிப் பாடிப்
பறந்ததனால்
தாகம்கொள்ளும்வேளையிலே
தண்ணீர்தந்தாள் மேகமகள்.

இன்று—
தண்ணீரில் எழுதிவைத்த
சித்திரம்போல்—எங்கள்
சந்தோஷக்கதை எல்லாம்
தலைமறைவே.
எம்மவர் கண்ணீரில் கரைகின்ற
ஈழமண்ணின்
கண்ணீர்க்கதைகளுந்தான்
கேளுங்களேன்...

மனித இரத்தத்தால்
அபிஷேகம்செய்து
சுடுகாட்டுச்சாம்பலினால்
கோலமிட்டு
ஊரெல்லாம் கூடிநின்று
ஒப்பாரிவைத்து
உடல்மெலிந்து உருக்குலைந்து
நடைதளர்ந்து
தொண்டைவரண்டு தாகம்கொண்டு
வானம் பார்க்க
மேகங்களும் ஏனோ அங்கே
செத்துவிட்டது

பெரும் பீரங்கிகள்தான் நின்று
முத்தமிட்டது.

அஞ்சியோடுகின்ற
பிஞ்சுப்பிள்ளைகளின்
அவலக்குரலைதான்கேட்டு
பொப்பிசை என்று
கைத்தாளம்போடும்
போர்க்குணம்கொண்ட மரமனிதரின்
கொடுமை நிறைந்த ஆட்சியினைக்
கொன்று களையவே
புது யுகம்நோக்கி இனிப்
புறப்படுவோம் வாருங்கள்.
புது யுகத்தில்
புனிதவெற்றி நாம்கொள்ளவே
முதலில் புனிதர்களாய்
எங்களை நாம் சுத்தம்செய்வோமே!

எங்களைக்கொன்றொழிக்கும்
வெறிகளோ பல
அவை—
தலைமை வெறி தர்க்கவெறி
வர்க்கவெறி மதவெறி
தமிழ்மண்மீட்கப்போராடும்
மன்னர்களை மறந்திங்கு
வாழும்வெறி
பொன்வெறி பொறாமைவெறி
போதைவெறிதான்களைந்து
மனிதர்களாய்த்தலைநிமிர்ந்து
தமிழர்களாய்க் கரம் இணைத்து
புதுயுகம்நோக்கி இனிப்
புறப்படுவோம் வாருங்கள்.

..................

—செ.யோகநாதன்.

வீண்பகைமை,கொடுங்கோன்மை
மாற்றிடிலே இந்தயுகம்
புதுயுகமாய் மாறிவரும். ”

—திருமதி: சசிகலா தேவராஜா.

“

..................

மண்ணை நினைத்துவிட்டால்
மனம் எரியும் துயர் நிறையும்
செய்வதற்குத்தொழிலில்லை
சேர்ந்துண்ண உணவில்லை
வாழ்க்கை தொடங்குமுன்னால்
மறுபயணம்—மரணம்—தொடர்கிறது.
உரிமையைக்கேட்டதனால்
உயிர்விலையாய்ப்போகிறது
ஏன் இந்த துயரநிலை?
எதற்கிந்த அவலநிலை?

துயரநிலை மாறுதற்கும்
துன்பநிலை தீருதற்கும்
உயிரழிவு குறைவதற்கும்
உரிமைகளைப்பெறுவதற்கும்
இறைமையைக்காப்பதற்கும்
இழிவாழ்க்கை போக்குதற்கும்
நற்றமிழைக்காப்பதற்கும்
நம்நாட்டை மீட்பதற்கும்
இன்றுமுதல்தேவை என்ன?
அது—
ஒற்றுமைதான்!
ஒற்றுமையே புதியயுகம்
உருவாக முதல்தேவை! ”

..................

—கே.விக்னேஷ்.

www.tamilarangam.net

## கத்தோலிக்க ஆன்மிகப்பணியகத்தின் நற்பணிக்கலைமாலை.

கத்தோலிக்க ஆன்மீகப்பணியகம்,ஊனமுற்றோர் நிதிதொடர்பாக நடத்திய கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு, டியூரன் வாழ் தமிழ்மக்களுக்கும் அவர்களது ஜேர்மன் நண்பர்களுக்கும் 28.02.92 அன்றுகிடைத்தது.
''போரினால் பாதிக்கப்பட்டோர்க்கு நிதிதிரட்டக் கலைநிகழ்ச்சி தேவையா?''என்று கேள்வி எழுப்பினோர்க்குக் கலை ஆற்றலுள்ளோர் திறமைவளரக் கைகொடுப்பதும் தங்கள்பணிதான் என முன்வந்திருக்கும் பணியகத்தின் சேவை பாராட்டற்குரியது.
''தாய்நாட்டிலிருந்து இத்தனை தூரத்துக்கப்பால்வாழும் எமக்கு நாட்டுக்கூத்துக் காணும்வாய்ப்பு எப்போ கிடைக்கும்?''என ஏங்கிய நாட்டுக்கூத்து இரசிகர்களுக்கு மேடையில் விருந்து காத்துக்கிடந்தது.
யுவானாக வருபவரும் ஏரோதாக வருபவரும் ஏரோதியாளாக வருபவரும் தத்தம் பங்களிப்பினைத்திறமையாக வழங்கிச் சபையின் ஏகோபித்த பாராட்டுக்களையும் கரகோஷங்களையும் பெற்றுச்சென்றனர்.
மீண்டும் எப்போ அவர்களது பாடலைக்கேட்கமுடியும் என்ற ஆவலை எழுப்பிச்செல்லும் அவர்களை மனந்திறந்து பாராட்டாமலிருக்க முடியாது.
நாட்டுக்கூத்து இரசிகர்களுக்கு அவர்கள் படைத்தளித்தது தெவிட்டாத இன்சுவை விருந்து.
பெரும் மேடைகளின்றிப் பிரமாதமான அலங்காரங்களின்றி-ஆயினும், கலையம்சத்துடனும் தாள அபிநயபாவத்துடனும் நடித்துள்ள நடிகர்களும் ஒழுங்குசெய்த அண்ணாவியாரும் பாராட்டுக்குரியவர்கள்.
எனினும் ஒருசில குறைபாடுகள் இருக்கத்தான்செய்தன.
குன்றிலே எழுந்த குரலுக்குரியவர் தவமுனிவர்; மன்னர் அவர்முன் துரும்பு; எனினும் மிகவும் முரடராக அவர் ஏன் சித்தரிக்கப்படுகிறார் என்பது புரியவில்லை.
அரசனை,''நீ''என்றும் ''மடையா''என்றும்,
அரசியைத்,''தலையில் நுழைந்துவிட்ட முள்போல உன்னைக்கிள்ளி எறிவேன்'' என்றும்,அவர் ஏன் கடுமையாக இருக்கவேண்டும் என்பது புரியவேயில்லை.
மன்னன் பணிந்துசெல்கையிலும் அவர் சீறிச்சினக்கிறார்.
அவரது தலைவெட்டல் நியாயமானது என்று கதைபுரியாதோர் முடிவு செய்யத்தக்க அளவுக்கு முரடராக-பேசத்தெரியாதவராக அவர் உருவம்கொடுக்கப்பட்டுள்ளார்.
கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்து கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம்செய்த அவரை ஏன் அப்படி உருவாக்கவேண்டும்?
புரியவில்லை!
அதற்கு வேதாகம ஆதாரமும் இல்லை.
நகைச்சுவையாக விளக்கம் கூறவந்தவர்கள் கூத்தின்முன்னே சிறு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளக்கம் கொடுத்திருந்தால் எல்லோரும் கதையைப் புரிந்துகொள்ள இலகுவாக இருந்திருக்கும்.
எனினும் நாட்டுக்கூத்து மிகவும் தரமான ஒன்றுதான் என்பது உறுதி.
தாளலய நாடகமும் எல்லோரது பாராட்டையும்பெற்றது.
பங்குபற்றிய ஒவ்வொருவரும் தத்தம்பங்களிப்பைச் செவ்வனே செய்துமுடித்தனர்.
ஆற்றலுள்ள நடிகர்கள்.
நகைச்சுவையைச் சற்றுக்கூட்டியிருக்கலாம் என்று எண்ணவும் இடம் இருந்தது.
பெண்கள் ஆயுதமேந்தும் இக்காலத்தில்,மேடை ஏறிக் கணவனைப் போடா வாடா என்று ஏசுதல்—நியாயமாக இருப்பினும்—சற்று வேதனையாகவும் இருந்தது.
இசை நிகழ்ச்சி வேறு எந்த இசைநிகழ்ச்சிக்கும் சளைத்தது அல்ல.
நாட்டுக்கூத்து,தாளலயநாடகம், இசைநிகழ்ச்சி என்பன திறம்பட நடந்தேறக் காரணமாயிருந்த வாத்தியக்கலைஞர்களையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.
ஆன்மீகப் பணியகத்தின் கலைப்பணி வளரவேண்டும் என வாழ்த்தும் கும்பலில் நானும் இணைந்துகொள்கிறேன்.

டியூரான் நகரிலிருந்து
ஆ.திருச்செல்வம்

உங்களுக்குத் தேவையான திருமண, பிறந்தநாள் அழைப்பிதழ்கள், திருமணவாழ்த்து மடல்கள், கடை விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள் ஏனைய தமிழ்மொழி ஆக்கங்கள் போன்றவற்றை அழகு மிகு தமிழ் எழுத்துக்கள் மூலம் அல்லது நீங்கள் விரும்பும் கையெழுத்துப் பிரதிகள் மூலம் விரும்பும் முறைகளில் படங்களுடன் குறைந்த விலைகளில் மிகவும் அழகாகவும், தெளிவாகவும் கொம்பியூட்டர் மூலம் பிரதி பண்ணிக் கொடுக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

வேதநாயகம் கபிரியேல்

Vethanayagam Gabriel
Danneckerstr. 94 7470 Albstadt. 1
Germany.
Tel:. 07431/72326
Tel:. 07431/3592
Fax:. 07431/63979

www.tamilarangam.net

# நம்மை நாமறிவோம்.

நம்மை அணைக்கின்ற உள்ளங்கள்மீது அன்பும்,
எதிர்க்கின்ற மனத்தவர் மீது எரிச்சலும்
நமக்கு ஏற்படுகின்றது.நம்மை நாம் எப்போதும்
நல்லவர்களாகவே நம்பிக்கொண்டிருக்கிறோம்,அல்லது
நமது தேவைகளில் மட்டுமே குறியாக இருக்கிறோம்.
அதனால்தான் நமது காரியங்களுக்கு
எதிரானவர்கள்மீது நம்மால் நட்புக் கொள்ள
முடிவதில்லை.
நமது மனங்களில் வெறுப்புணர்வு வருகிறது.
விரோதித்துக் கொள்கிறோம்,அல்லது
விலகிக்கொள்கிறோம்.இதனால் மட்டும் நமக்கு அமைதி
வந்துவிடுகிறதா என்றால் அதுவும் இல்லை.
தனிமை வாழ்க்கைக்குச் சலிப்பைத் தருகிறது.
மறுபடியும் சமூகத்தோடு இணைந்துகொள்ள
விரும்புகிறோம்.எல்லோருடனும் பழகுகிறோம்.
மறுபடி இந்த நட்பும் பகையும்.
உலகத்தில் பிறந்த எல்லா மனிதர்களும்
உள்ளத்தால் மனிதர்களாக வாழ்கிறார்களா
என்றால் இல்லை.
இருளும் ஒளியும் இயற்கையின் நிலைகள்.
இன்பமும் துன்பமும் மனத்தின் நிலைகள்.
மனம் என்பது வளராவிட்டால் மாடுகள்போல்
வாழ்ந்துவிடலாம்.
வளர வளர மனமும் வளர்கிறதே!
இந்த வளர்ச்சியில்தான் சிக்கலே ஆரம்பிக்கிறது.
மனம் வளர்ந்தால் உலகத்தின் நிலைகண்டு
துயரம் வளர்கிறது.
மனம் வளராவிட்டால் நாமே உலகத்தின்
துன்பத்தை வளர்க்கும் மூலவேர்கள் ஆகி
விடுகிறோம்.

மனத்தால் நாம் முறையாக வளர்ந்தாக
வேண்டும்.
இந்த வளர்ச்சி என்பதில் பெரும் பங்கு நம்மைப்
பெற்றவர்க்கு உண்டு.அதற்கு அடுத்தபடியாக
நமது சுற்றம். பிறகு நமது நண்பர்கள்.
பிறகு நமது சமுதாயம்.
'மனிதன் நல்லவனாய்த்தான் பிறக்கிறான்
சமுதாயமே அவனை மாற்றுகிறது'என்பதில்
எனக்கு உடன்பாடில்லை.
'நாம் நல்லவர்களாக இருந்துவிட்டால்
இந்தச் சமுதாயத்தை நல்லதொரு சமுதாயமாக
நாமே மாற்றிவிடலாம்.'
நமது வாழ்வில்–
கவனித்திருக்கிறீர்களா. நம்மிடம் எத்தனைதான்
நிறைகள் இருந்தபோதும் ஒரு சிறு குறையே
அத்தனை நிறைகளையும் அர்த்தமில்லாததாக்கி
விடுகிறது அல்லவா.

ஒரு சமுதாயம் எத்தனையோ நல்லவர்களைத்
தன்னுள் கொண்டிருந்தாலும் ஒரு தீயவன்
இருந்துவிட்டால் அந்தச்சமுதாயமே பேர்கெட்டுப்
போகிறது அல்லவா.
ஆக–
நம்மிடமுள்ள குறைகளை மற்றவர்கள் சுட்டிக்
காட்டுவதற்குமுன் அதை நாமே கண்டுபிடித்து
களைந்துவிடுவது நமக்கும் நல்லது நாட்டுக்கும்
நல்லது அல்லவா?
நம்மிடமுள்ள குறைகளைக்களைந்து–
நமது மனத்தை நாம் தூய்மைப்படுத்திக்கொண்டால்
நம்மை நாமே நேசிக்கக் கற்றுக்கொள்கிறோம்.
நம்மை நாமே நேசிக்கக் கற்றுக்கொண்டு விட்டோமானால்
மற்றவர்கள் மீதும் நம் நேசம் வளரும்.
அன்புணர்வு வளர்ந்துவிட்டால்–
ஆரோக்கியமான சமுதாயத்தை–
நாம் கட்டி எழுப்பிவிடலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரங்கும் இன்னிசை இரவு

பிறேமனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் (25. 04. 1992 ல்)
ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஈழ அகதிகளுக்காக
இரங்கும் இன்னிசை இரவு நிகழ்ச்சி SCHWANEWEDE
என்னும் இடத்தில் நடைபெற்றது.
''நம் மண்ணில் நம்மவர்படும் துயரை நாம் என்றும் மறந்தோமில்லை
எங்களால் இயன்ற பங்களிப்பை நாங்கள் வழங்குவோம்; எங்கள்
கலைகளையும் மறவாது காப்போம்!'' என்று சொல்வதுபோல்
பிறேமன்வாழ் தமிழ்மக்கள் ஒன்று திரண்டிருந்தனர்.
ஜேர்மனியின் பல்வேறு நகரங்களிலிருந்தும் வருகை தந்திருந்த
அனைத்துக்கலைஞர்களும் தங்கள் கலைத்திறமைகளை
வெளிப்படுத்தினர்.
மௌன அஞ்சலியுடன் ஆரம்பித்த இரங்கும் இன்னிசை இரவு
நிகழ்ச்சியில் திருமதி ஸ்ரீமீரா சீவரத்தினம் வரவேற்புரை
வழங்கியபின்,தமிழீழம் இசைக்குழுவினரின் மெல்லிசைகீதங்கள்
இடம்பெற்றன.
வாணி நர்த்தனாலய மாணவிகளின் நடனநிகழ்ச்சிகள்.
நடன கலாரூபன் கமலபாதம்-தாஸ் ஆகியோர் வழங்கிய
நடன,நாடக நிகழ்ச்சிகள்.
ஸ்ரீபதி வழங்கிய மந்திரஜாலவித்தைகள்.
ஐசாக் இன்பராஜாவின் லூஸ்மாஸ்டர் நகைச்சுவைத்தனிநடிப்பு
என்பன தெவிட்டாத கலைவிருந்தாக அமைந்திருந்தன.

பலவருடங்களுக்கு முன்பாகவே ஈழத்தில் அறிமுகமான
லூஸ்மாஸ்டர் இந்த இரங்கும் இன்னிசை இரவுநிகழ்ச்சி
தனது ஐம்பதாவது மேடை என்று குறிப்பிட்டார்.
(இந்த நகைச்சுவைக்கலைஞர் இன்னும் பலநூறு மேடைகளில்
தன் கலைப்பணியைத்தொடரவேண்டுமென்று மனதார வாழ்த்துகிறோம்)

திருமதி ஸ்ரீமீரா சீவரத்தினம் தயாரித்தளித்த
விடிவு குறுநாடகம் நமதுமண்ணின் துயரநிலையைப்
பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.முற்றிலும் மங்கையர்களே
பங்குகொண்டிருந்த இந்நாடகத்தில் அனைவரும் தங்கள்
இயல்பான நடிப்பாற்றலை வெளிப்படுத்தினர்.
இடைவேளையின்போது, பிறேமன் மக்களால் தயாரிக்கப்பட்ட
சிற்றுண்டிவகைகள், அதிர்ஸ்டலாபச்சீட்டு என்பன விற்பனைசெய்யப்பட்டு
ஈழ அகதிகளுக்காக நிதி சேர்க்கப்பட்டது.
நிகழ்ச்சிமுடிவில் திருமதி நளினி தர்மலிங்கம் நன்றியுரை
வழங்கினார்.

—ஞானி.

www.tamilarangam.net

இந்துமகேஷ்.

அத்தியாயம்: இரண்டு.

---

நான்கு நாட்களாகிவிட்டன.
இன்னும் பயணக்களைப்புத்தீரவில்லை.
மேற்குபேர்லினில் காம்ப்வாழ்க்கை...புதிய நண்பர்களையும்,
புதிய கவலைகளையும் அறிமுகப்படுத்தியிருக்கது.
'சிறுபான்மையைப்பெரும்பான்மை அடிமைகொள்ளமுனைகிற ஒரு

நாட்டிலிருந்து வெளியேறி வந்தால்,இங்கேயும் கிட்டத்தட்ட
அப்படி ஒரு வாழ்க்கையா?"
–மனம் பெரிதாய்த்தவிக்கத் தொடங்கிற்று.
சொந்த நாட்டில் வாழமுடியாமல் தஞ்சம்கோரி ஜெர்மனிக்கு ஓடிவந்த
கறுப்பர்களையும்,லெபனான்காரரையும்,பாகிஸ்தானியரையும்,
பங்களாதேஷினரையும்,போலந்துக்காரரையும்,எதியோப்பியரையும்போல்...
நாங்களும்...?'
'சொந்தமண்ணைவிட்டுவிட்டு வெளிப்பட்டது எத்தனைபெரிய பைத்தியக்
காரத்தனம்'என்று இப்போது தோன்றிற்று.
இனப்படுகொலையை வெற்றிகரமாய்ச் சாதிக்கின்ற அரசாங்கங்கள்....
இராணுவ அட்டூழியங்கள்...சீர்கெட்டுப்போன பொருளாதாரநிலைமை...
இவைகளில் ஏதோ ஒன்று எல்லா மனிதரையும் ஆட்டிப்படைக்கும்போது
அதிலிருந்து மீள்வதற்கு முடியாமல் இப்படித்தான் ஓடி
வரவேண்டியிருக்கிறது.
அந்தத்துன்பங்களிலிருந்து மீள்வதற்கென்று இங்கே ஓடிவந்தால்,இங்கே
புதுமாதிரியான அடிமைத்தனம்....
''ஒன்றைமட்டும் வடிவாய் விளங்கிக்கொள்...இந்த நாட்டுக்கு நீ ஒரு
அகதியாய்த்தான் வந்திருக்கிறாய்...உனக்குவேண்டியது என்ன..?'
உணவு,உடை,உறைவிடம்...இவ்வளவையும்தான் நாங்கள் உனக்குத்
தரமுடியும்...வடிவாய்ச்சாப்பிடு..நன்றாகப்படுத்துறங்கு...இதற்குமேல்
எங்களிடம் வேறெதும் கேட்காதே!'' என்று சொல்லாமல் சொல்லி
அடிமைப்படுத்துகிற புதிய ஏற்பாடுகளை ஐரோப்பிய நாடுகள்
அழகாய்க் கற்றிருந்தன.

# மௌனத்தில் அழுகின்ற மனங்கள்

www.tamilarangam.net

''இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே...?''என்று கேட்டான் விமல்.
வெளியே இலைகளை உதிர்த்துவிட்டு வெற்றுமேனியாக நிற்கின்ற
மரங்களின்மீது பனி படர்ந்துகிடக்கும் அழகை இரசித்தபடி
நின்ற கிறிஸ்தோபர் விமலின் பக்கம் திரும்பினான்.
''நீ எதைக்கேட்கிறை விமல்?''
''பேர்லினில் நாங்கள் இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இருக்கவேணும்?''
''அதை நாங்கள் தீர்மானிக்கமுடியாது விமல்'' என்றான் கிறிஸ்தோபர்.
''இங்குள்ள சட்டப்படி அகதிகளாக வருபவர்களுக்கு இவர்கள்
என்ன நடவடிக்கை எடுக்கிறார்களோ அதற்கு நாங்கள் கட்டுப்பட்டுத்தான்
ஆகவேணும்''
''அகதி'' என்று விமலின் உதடுகள் ஓசையின்றி அசைந்தன.
பிறந்தநாட்டில் அடிமை..புகுந்த நாட்டில் அகதி...
அடிமைக்கும் அகதிக்கும் என்ன வித்தியாசம்...?
அடிமை என்பவன் இரும்புக்கூண்டுக்குள் சிக்குப்பட்ட கிளி...
அகதி என்பவன் தங்கக்கூண்டுக்குள் பாலும் பழமும் உண்ணுகின்ற கிளி.
மனித சுதந்திரம் என்பது எங்கே?

''விமல்... வல்லரசுகளின் வலைக்குள் சிக்கிக்கொண்டுவிட்ட எல்லா
நாடுகளிலுமே பிரச்சனைகள் பெருகிவிட்டன. அதனால் நாடுவிட்டு
நாடு தாவும் அகதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது....
இந்தநிலைமையிலை தஞ்சம்கோரி வருகிறவர்களை எல்லாம் காம்ப்களுக்குள்
அடைத்துப் பராமரிக்கிறதைத்தவிர இவர்களால் வேறேதும்
செய்யமுடியவில்லை...!''
''இப்பிடித்தெரிந்திருந்தால்...?''
''வராமலேவிட்டிருக்கலாம் என்டு சொல்லவருகிறாயா விமல்...?நீ
இங்கை வந்து நாலுநாள்தானே ஆகுது.இதுக்குள்ளை வெறுத்துக்கொண்டால்
எப்பிடி?..விமல்..!கொஞ்சம் ஆறுதலாய் யோசிச்சுப்பார்.உண்மையிலை எங்கடை
சொந்த மண்ணிலை எங்களாலை உயிர்வாழமுடியுமா?எங்கடை உயிர்களுக்கு
அங்கை என்ன உத்தரவாதம்?''
''அப்ப...எங்கடை உயிரைக்காப்பாற்றிக்கொள்ளத்தான் நாங்கள் இங்கை வந்தமா
எங்களைநம்பி எங்களுக்காக வாழ்கிற உயிர்கள் அங்கை இல்லையா?...
அதுகளைப்பலிகொடுக்க நாங்கள் தயாராகவா இருக்கிறம்?''
''இந்தக்கேள்விக்கு என்னாலை பதில்சொல்லமுடியாது விமல்...!''
என்றான் கிறிஸ்தோபர்...மறுபடியும் கண்ணாடி ஜன்னல்வழியாக வெளியே
பார்வையை ஓடவிட்டான்.

''விமல்...உன்னைப்பொறுத்தவரைக்கும் எப்படியோ...ஆனா..நான் இந்தநாட்டுக்கு
ஒரு அகதியாய்த்தான் வந்திருக்கிறன்...ஏன் தெரியுமா..எனக்கு ஊரிலை
உறவென்டு ஆருமே இல்லை.''
''ஓ..!அதாலைதான் நீ எதையுமே அலட்சியமாகவே நினைக்கிறை...
''என்றான் விமல்.
''ஆனா என்னாலை அப்பிடி நினைக்க முடியாது கிறிஸ்டி...!பெற்றதாயையும்
கூடப்பிறந்த தங்கச்சிகளையும் அங்கை பணயம் வைச்சிற்றுத்தான் நான்
இங்கை வந்திருக்கிறன்.''

www.tamilarangam.net

''நீ பணயம் வைச்சிட்டு வந்திருக்கிறை...ஆனா என்னுடைய தாயையும்,
தம்பிமார் ரெண்டுபேரையும், ஒரு தங்கச்சியையும், சிங்களவெறியர்களின்
நெருப்புக்கும் துப்பாக்கிக்கும் பலிகுடுத்திட்டு நான் வந்திருக்கிறன்''
–திடுக்கிட்டுநிமிர்ந்தான் விமல்.
''கிறிஸ்டி...நீ...நீ...இதை முதலே சொல்லேல்லையே..!''
–எழுந்துபோய் கிறிஸ்தோபரின் தோளைத்தொட்டு அவனைத்தன்பக்கம்
திருப்பினான் விமல்.
கிறிஸ்தோபரின் கண்கள் கலங்கியிருந்தன.
''என்னுடைய வாழ்க்கையிலை எல்லாத்தையுமே நான் இழந்திட்டன்...
ஆனா,இழக்காதது ஒண்டுமட்டும்தான். அது என்னுடைய மனத்தைரியம்.
எல்லாரின்ரை உயிரும்போனபிறகு என்ரை உயிர்மட்டும் ஏன் நிலைச்சிருக்குது
எண்டு என்னை நானே கேட்டுக்கொண்டன்...அதுக்கு ஒரே ஒரு காரணம்தான்
இருக்கமுடியும்...அந்தக்காரணம் என்ன எண்டு இப்ப என்னட்டைக்கேட்காதை
..பிறகு ஒரு சந்தர்ப்பத்திலை அதை உனக்குச்சொல்லுவன்.''

அத்தியாயம்: மூன்று

---

விமலின்கண்களில் தூக்கம் ஒட்டிக்கொள்ளமறுத்தது.
அறைக்குள்ளிருந்த மின்விளக்கை அணைத்து வெகுநேரமாகியிருந்தது.
என்றாலும் அறைக்குள் மங்கலான வெளிச்சம் நிலவிற்று.
வெளியே கொட்டிக்கொண்டிருந்த பனியின் குளிர் அறைக்குள்ளும் நுழைந்து
உடலைச்சீண்டிற்று...போர்வையை இழுத்து இன்னும் இறுக்கமாகப்
போர்த்திக்கொண்டான்.
உடலைத்தாக்கும் குளிரைவிட மனத்தைத்தாக்கும் நினைவுகள்தான்
அதிகமாய்வதைப்பதாய் உணர்ந்தான்.
பக்கத்துக்கட்டிலில் படுத்துக்கொள்ளும் கிறிஸ்தோபரை இன்னும் காணோம்.
இரவு பன்னிரண்டு மணிக்குப்பிறகுதான் அவன் வருவான்.
ஆனால் இன்றைக்கு இரவு இரண்டுமணிக்குமேலாகியும் அவனைக்காணவில்லை.
நான்கு அகதிகளுக்கான இந்த அறைக்குள் இப்போது விமலும் கிறிஸ்தோபரும்
மட்டும்தான்.மற்ற இருவரும் வேறொரு நகரத்திலுள்ள காம்ப்புக்கு
மாற்றப்பட்டிருந்தார்கள்.
நாளை இங்கு வேறு புதிய அகதிகள் வரலாம்.
கிட்டத்தட்ட எழுநூறுபேர்வரை இந்தக்காம்ப்பில் இருந்தார்கள்.
அரைவாசிப்பேர் இலங்கையர்கள்...மற்றப்பங்கினரில் அரைவாசிப்பேர்
கறுப்பர்கள்...ஏனையவர்கள் பாகிஸ்தானியரும்,பங்களாதேஷினரும்
இப்போதெல்லாம் மாலைநான்குமணிக்கே பொழுது சாய்ந்துவிடுகிறது.
மறுநாள் காலை ஏழுமணிக்குத்தான் பொழுதுவிடியும்.
இரவு நீண்டதாக இருப்பதாலோ என்னவோ இரவையும் பகலாகவே
எண்ணவேண்டியிருக்கிறது.
அறைக்குவெளியே இந்நேரத்திலும் ஆரவம் கேட்டுக்கொண்டுதானிருந்தது.
'சிறையில் அடைபட்டிருப்பவன் தூங்கமுடியுமா..?'என்னைப்போலத்தான்
எல்லோரும் 'என்று நினைத்துக்கொண்டான் விமல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பலவருடங்களுக்கு முன்புவந்த நம்மவரெல்லாம் இங்கு இப்படித்தான் வாழ்ந்தார்களா?...இங்கே தங்கள் சுதந்திரத்தை அடகுவைத்து அகதியாகமாறி அவலவாழ்க்கைவாழ்ந்துகொண்டு...நாங்களெல்லாம் பெரியமனிதர்கள் என்று பகல்வேஷம்போட்டார்களே....இதைவிட, சொந்த மண்ணின் சுதந்திரத்துக்காக இவர்கள் அங்கேயே இரத்தம் சிந்தியிருக்கலாம்.'

'அவர்களைக்குற்றம் சொல்லி என்ன..இப்போது நானும்கூட..!'என்று நினைக்கையில் விமலுக்குத்தன்மீதே கொஞ்சம்வெறுப்புவந்தது.

'எங்கள் முந்தின சந்ததி எங்கள் சுதந்திரத்தைப்பற்றி ஆழமாகச் சிந்தித்திருந்தால் எங்களுக்கு இந்தநிலை வந்திருக்குமா?

சொந்தமண்ணில் வாழப்பயந்து எல்லோரும் அகதிகளாக வெளியேறும் அவலநிலைதான் வந்திருக்குமா?"என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான் விமல்.

'முந்தின சந்ததி எங்களுக்காக எதையும்செய்யவில்லை...சரி, எதிர்காலச்சந்ததிகளுக்காக இப்ப உள்ள தலைமுறையினர் நாங்கள் என்னசெய்கிறோம்?"

—அந்தக்கேள்வி சட்டென மனத்தைப்பற்றிக்கொண்டதும் விமலுக்கு எதுவும் தோன்றவில்லை.

'மற்றவர்களில் மாற்றம் ஏற்படவில்லை என்று வருத்தப்படுவதில் அர்த்தமில்லை.. முதலில் நான் மாறவேண்டும்...ஒவ்வொருவரும் தனக்குள்ளே சுதந்திர உணர்வை வளர்த்துக்கொள்ளவேண்டும்...நான் பாதிக்கப்படவில்லை என்று சந்தோஷப்படுவதைவிட மற்றவர்களின் பாதிப்புக்கள் நாளை நமக்கும் என்று சிந்திக்கவேண்டும்...

அப்பாவை இனவெறியர்களின் துப்பாக்கிக்குண்டுக்குப் பலிகொடுத்தபின்பும்கூட நான் என்னசெய்தேன்?..அப்பா விட்டுப்போன கடைமைகள் என்று என் அம்மாவுக்காக,தங்கைகளின் சீதனத்துக்காக உழைக்கவேண்டும் என்ற ஒரு சின்ன வட்டத்துக்குள்தானே நானும் நின்றுகொண்டிருக்கிறேன்.

இப்படி நான் மட்டும்தானா?

எத்தனைபோபேர்.!இந்தக்கிறிஸ்தோபர்கூட.

கிறிஸ்தோபரின் நிலைமையில் நான் இருந்திருந்தால் ஒன்றில் என் உயிரையும் மாய்த்துக்கொண்டிருப்பேன்.... அல்லது ஒரு போராளியாக மாறியிருப்பேன்.

ஆனால் இந்தக்கிறிஸ்தோபர்...?

இவன் மனத்தில் என்ன இருக்கிறது.

அறைக்கதவு மெதுவாகத்தட்டப்பட்டது..

கிறிஸ்தோபர்தான் என்று நினைத்தான் விமல்...

படுக்கையில் கிடந்தபடியே பார்வையைக் கதவின்பக்கம் திருப்பினான்..

மறுபடியும் கதவு தட்டப்பட்டது.

இது கிறிஸ்தோபர் இல்லை..

அவனாக இருந்தால் இரண்டுதடவை கதவைத்தட்டிவிட்டு இந்நேரம் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்திருப்பான்.

இது வேறு யாரோ.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமாட்டில் சுவரில் பொருத்தியிருந்த சுவிட்சைத் தட்டினான் விமல்.
இருளைக்கலைத்து, கதவின்பக்கம் பார்வையைத் திருப்பினான்.
போர்வையை உதறிவிட்டு எழுந்துபோய்க்கதவைத்திறந்தான்.
எதிரில்–
அரைகுறை ஆடையுடன் ஒரு கறுப்பின அழகி.
(தொடரும்)

---

## – சமைத்துப்பார்க்கலாம். –



### காரட்–பால் அல்வா.

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| காரட் | 500 கிராம் |
| சீனி | 250 கிராம் |
| நெய் | 100 கிராம் |
| பால் | 250 மி.லீற்றர் |
| ஏலக்காய் | 5 |

செய் முறை:

- முந்திரிப்பருப்பை வறுத்து நறுக்கி வைக்கவும்.
- ஏலக்காயை பொடிசெய்து வைக்கவும்.
- காரட்டை துருவி பாலில் அவித்து வடிகட்டி எடுத்து அரைத்து வைக்கவும்.
- வடிகட்டி வந்த பாலில் சீனியை கரைத்து அடுப்பில்வைத்து சூடாக்கவும்.பின் அரைத்த காரட்டை இட்டு கிளறி ஏலக்காய்ப்பொடி. நெய் இரண்டையும்விட்டு, பிசுபிசுப்புப்பதம் நீங்கும்வரை அடிப்பிடிக்காதபடி கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். பின்னர் சிறிய கோப்பைகளில் இட்டு பரிமாறலாம்.

– நடேஸ் மாமி.

www.tamilarangam.net

# எங்கள் தளிர்கள்




தெரிந்துகொள்வோம்.

1) உலகிலேயே மிகப்பெரிய கடிகாரம் எது?
2) மக்கள் தொகையில் பெரிய நாடு எது?
3) பெரிய கண்டம் எது?
4) பெரிய கடல் எது?
5) நிலப்பரப்பில் பெரிய நாடு எது?
6) பெரிய வளைகுடா எது?
7) மிகப்பெரிய பாலைவனம் எது?
8) மிகப்பெரிய கிரகம் எது?
9) சிறிய கிரகம் எது?
10) விண்வெளிக்கு முதன்முதலில் சென்றவர் யார்?

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கள் தாய்மொழியும் நாங்களும்.

நமது தாய்மொழி தமிழாகும்.
குழந்தைகளாக ஜெர்மனிக்கு வந்த என்போன்ற சிறுவர்களும்,
இங்கு பிறந்து வளரும் தமிழ்க்குழந்தைகளும்
டொச்சிலேயே கல்விபயிலுகிறோம்.
ஆனாலும் எங்கள் தாய்மொழியை நாங்கள் மறந்துவிடவில்லை.
அம்மா,அப்பாவுடனும் உற்றார் உறவினர்களுடனும் நாங்கள்
தமிழில்தான் கதைக்கிறோம்.
நாங்கள் ஜெர்மனில் பிறப்பதாலோ அல்லது வசிப்பதாலோ
நாங்கள்
ஜெர்மன்காரராகிவிடமுடியாது.
நீ யார்? என்று என்னை யாராவது ஜெர்மன்காரர் கேட்டால்
நான் தமிழன் என்றுதான் பதில் சொல்வேன்.
நானும் ஜெர்மன்காரன் என்று சொல்லமுடியுமா?
நாங்கள் தமிழர்தான்.
ஆகவே,நாங்கள் தமிழை மறக்காமல் கற்கவேண்டும்.
தாய்மொழியாம் தமிழ் தெரியாமல்,
நாங்கள் வளர்ந்துவிட்டால்
பிறகு நமது தாய் நாட்டுக்கு நாங்கள் திரும்பும்போது
அங்குள்ள தமிழ்மக்கள் எங்களைத் தமிழர்கள் என்று
ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.
எங்கள் தமிழில் எத்தனையோ நல்ல விஷயங்கள்
இருக்கின்றன என்று பெரியோர்கள் சொல்வார்கள்.
நாங்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது–
எங்கள் தாய்மொழியாம் தமிழில் நல்லறிவுபெற்றவர்களாக
வளரவேண்டும்.

இப்படி நான் சொல்வதால் டொச் மொழியை நாங்கள்
படிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை.
எந்த நாட்டில் இருந்தாலும் அந்த நாட்டுமொழியை
நாங்கள் தெரிந்திருப்பது நல்லது.
ஆனால்,எங்கள் தாய்மொழியை மறந்துவிடக்கூடாது.
தமிழர்கள் மிகவும் புத்திசாலிகள் என்று
பலபேர் சொன்னதை நான் கேட்டிருக்கிறேன்.
அது எங்கள் மொழிக்குக் கிடைத்த பெருமை.
புத்திசாலிகளான தமிழர்கள்
எத்தனை மொழிகளையும் கற்பது சுலபம்.
சொந்தமொழியான எங்கள் தாய்மொழியாம் தமிழைப்
பேசுவதும் படிப்பதும் கஷ்டமா?
இந்த நாட்டில் நான் தனிய டொச்சைக்கற்றால்
எங்கள் நாட்டுக்குப் போகும்போது அங்குள்ள எனது
உற்றார் உறவினர்களுடன் பேசும்போது நான் என்னபாஷையில்
பேசுவது.
எனது கெட்டித்தனங்களை என்னமொழியில்
வெளிப்படுத்துவது.
எனவே எல்லோரும் தமிழ் தெரிந்தவர்களாக
இருப்பது எங்களுக்கும் எங்கள் தாய்நாட்டுக்கும்
பெருமையைத் தரும்.

*-வி.விநோத்.*
(பூவரசு ஆண்டுவிழாவில் பேசியது)

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக!" -குறள்


"நல்லவைகளைப் பிழையின்றிக் கற்று
அவைகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும்."

www.tamilarangam.net



# தந்திரத்தை வென்ற தந்திரம்.





பறவை இறைச்சி புசிக்கும் ஆசையில்
நரியார் ஒருவர் எங்கும் அலைந்தார்.
பறவைகள் எதுவும் சிக்கிடவில்லை
பளிச்செனப் புதிய திட்டம்போட்டார்.




இறந்தவர்போலக்கிடந்தால் அங்கே
எல்லாப்பறவையும் வருமென நினைத்தார்



நினைத்ததுபோலக் காகம் ஒன்று
நேராய் அவரை நோக்கிவந்தது.


www.tamilarangam.net

நரியின் தந்திரம் உணர்ந்த மற்றப்
பறவைகள் அதனை நெருங்கிடவில்லை.



நரியின் தந்திரம் உணராக் காகம்
நம்பி அதன்மேல் போய் உட்கார்ந்தது.

அந்தோ காகம் அந்த நரியிடம்
அகப்பட்டவறித் துடியாய்த்துடித்தது.
தந்திரத்தாலே தானும்தப்ப
அந்தக்காகம் திட்டம்போட்டது.



- என்னை நீங்கள் உண்பதன்முன்னால்
உங்களுக்கோர் சிறு வித்தைகாட்டுவேன்
அதுவரை என்னைக் கொன்றிடவேண்டாம்
அடைப்பீர் என்னைச் சிறுபெட்டியினுள்

www.tamilarangam.net





தந்திரத்தாலே அழிக்கநினைப்போர்
தந்திரத்தாலே வெல்லப்படுவார்.

சித்திரம்: பிரசன்னா.

தெரிந்துகொள்வோம்– விடைகள்.

1) பிக்பென்
2) சீனா
3) ஆசியா
4) பசிபிக்
5) ரஷ்யா
6) மெக்சிகோ
7) சகாரா
8) வியாழன்
9) புதன்
10) யூரி ககாரின் (ரஷ்யா)




1 முதல் 35 வரை இலக்கமிடப்பட்டுள்ள புள்ளிகளை இணையுங்கள்.

பின்னர் வண்ணம் தீட்டிப் பாருங்கள்

குறுக்கெழுத்துப்போட்டி இல: 1
விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ரு | 3 வ | 4 ள் | 5 ளு | 6 வ | 7 ர் | |
| 8 ங் | | 11 ஞா | 12 ன | 13 யா | 14 ர் | | 16 ஸ் |
| 17 க | 18 ள | 19 ஞ் | 20 சி | 21 ய | 22 ம் | | 24 ழ |
| 25 ள் | | 27 ழி | 28 வ | | | | 32 ஒ |
| | 34 கு | 35 ர | 36 தூ | 37 ண | 38 ண் | 39 ர் | 40 ங் |
| | 42 ழ | 43 ம் | 44 கோ | 45 ஜ | | | 48 ஷா |
| | 50 நீ | 51 மா | | 53 ட | | | 56 ஸ் |
| 57 வ | 58 தை | 59 னி | | 61 ம் | 62 ம | 63 ஸ் | 64 ர் |

சரியான விடைகளை எழுதி
பரிசு பெறுபவர்—

செல்வி ஜூர்த்தினா கேதீஸ்வரன்
(கொம்பூர்க்)

www.tamilarangam.net

குறுக்கெழுத்துப்போட்டி இல: 2



இடமிருந்து வலம்:
1-8 . முப்பெரும் சக்திகளுக்காக இந்துக்கள் கொண்டாடும் திருநாள்.
11-15. தெனாலிராமனை இப்படியும் அழைப்பர்.
29-31. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கடற்பகுதி.
66-71. இதிகாசபுராணங்களில் ஒன்று.
73-76. தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் மாதம்.
80-81. சூரியன் மறையும்நேரம்.

மேலிருந்து கீழ்:
5-23. ஒவ்வொருநாளும் இது மாறும்.
8-71. ஜேர்மனியில் சிறுவர்களுக்கென வெளியாகும் தமிழ்ச்சஞ்சிகை.
9-81. இலங்கையில் உள்ள பெரியமலை.
10-64. கிழமைகளில் புனிதமானதெனக் கருதப்படும் கிழமை.
39-88. எமது தாய்நாடு.(கீழிருந்து மேலாக)
51-78. பெண்கள் அணியும் ஆபரணங்களில் ஒன்று.

*

அன்புத்தம்பி தங்கைகளே
உங்களுக்கெனத்தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தக் குறுக்கெழுத்துப்போட்டிக்குரிய சரியான விடைகளை எழுதி பூவரசு முகவரிக்கு 6ம் 30ம் திகதிக்குமுன்பு அனுப்பிவையுங்கள்.
சரியானவிடைகளை எழுதியவர்களது பெயர்கள் அடுத்தபூவரசு இதழில் வெளிவரும்.
உங்கள் பெயர்களிலிருந்து குலுக்கல்முறையில் தெரிவுசெய்யப்படும் ஒருவருக்கு 10 டி.எம். பரிசாகக் கிடைக்கும்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூவரசு நிழலினிலே தொடரும் புதுப்பாட்டு.

முதல் அடி.

கர்ப்பத்திலிருந்து
உதிர்ந்த குண்டுமணிகள்
மண்ணைத்தொட்டபோது
ஆரவாரங்களையும்
கற்கண்டுக்குவியலையும் கண்டு
அகந்தையுற்று
அம்மாவின் வயிற்றில்தான்
எட்டி உதைக்க
''செல்லக்கண்ணா'' என
உச்சிமோர்ந்தாள்
பெண்களுக்கெதிரான
முதலடி அதுவென
அவளுக்குத்தெரியாது.

இராஜன் முருகவேல்.




மனக்கூரை விளக்கு.

வானக்கூரையினுக்கோர்
வட்ட விளக்கோ நீ வெண்ணிலாவே
நாளும் முகில்கள் உன்னைத்
தொட்டுத்துடைத்திடுமோ
அந்தியிலே வந்து
இன்ப ஒளி ஏற்றிவிட்டாய்
அத்தனையும் மறந்து என்மனம்
உன்மீது இச்சை கொண்டது
அச்சம்கொண்டனையோ வெண்ணிலாவே
பெயருனக்கு ஆயிரமோ
இன்னும் மணமானதோ இல்லையோ
உன்னை
எத்தனைபேர் காதலித்தார்
எவரெல்லாம் கவி படித்தார்
மொத்தமும் அறியாது
பித்தனாய்ப்போகிறேன்
பதிலேதும் கூறாது வானை
இருளாக்கி நீ மறைந்ததென்ன
இதயத்தை விரித்துவைப்பேன்
எண்ணத்தை வான் ஆக்கி
மறுபடி நீ பிறந்துவந்தால்
என் மனக்கூரையில் உன்னை
விளக்காகத்தொங்கவைப்பேன்.

—ஜெகதீஸ்வரி ராஜரட்னம்.

www.tamilarangam.net



துக்கம்.

பாடுபட்டு பத்துமாதம்
அன்னையவள் சுமந்திட
கருவறையில் இருந்து
வெளிவந்ததும்
கல்லறைநோக்கி பயணமா?

—பீற்றர் குலம்.

வஞ்சனை!

நீதிபேசுபவர்களின்
நீதியற்ற நெஞ்சங்களை
நினைத்துப் பார்த்தேன்
நிலையான சொற்கள்
அவர்கள் நாவில்
நிற்பதாயில்லை
இருந்தும்
நிர்க்கதியற்றவர்களை
ஏன் அவர்கள்
நிந்திக்கிறார்கள்.

செல்வி:ஜெகதீஸ்வரி அப்புத்துரை.

பட்டினிகள்.

பாம்பும் சுவைக்கப்
பழகிவிட்டான்
பல்லியும்சுவைத்துப்
பசிதீர்ப்பான்
பாசம்
பண்பு சுவைக்காமல்
பட்டினியாய்
தினம்
தனிமையில் சாகின்றான்.

—செ.யோகநாதன்.

உருப்படுதல்.

''தமிழன் இனிமேல் உருப்படமாட்டான்!''
—தமிழன்பற்றி இன்னொரு தமிழன்
தன்னினத்தானிடம் தனியாய்ச்சொன்னான்
''தமிழன் இனிமேல் உருப்படமாட்டான்!''

சொன்னதும் தமிழன் கேட்டதும் தமிழன்
சொல்லப்பட்டதும் அவர்களில் ஒருவன்.
என்னைப்பற்றி என்னைநானே
என்னிடம்சொல்லி அழுவதுபோல.
இவர் அதை உணரா வரையினில் இந்த
இகழ்ச்சியும் பாடும் என்றும் தொடரும்.

மனிதரில் ஆயிரம்வகையினர் உண்டு
மாந்தர்,விலங்கு மனத்தவர் உண்டு
எல்லாமொழியிலும் மதத்திலும் இனத்திலும்
பிரிவுகள் உண்டு பேதமை உண்டு
அறிவோம் அதனை
ஆகையினாலே—
எங்களைநாங்களே இகழ்வதைவிட்டு
எங்களைநாங்களே மாற்றிடில் என்ன?

மறுபடி ஒருநாள் நாங்கள் பாடி
மகிழ்வோம் இப்படி—
''தமிழாய்ப்பிறந்தது நாங்கள்செய்த
தவம்தான் தவம்தான்.''

—இளந்தீவகன்.

www.tamilarangam.net

❀ சென்ற ஏப்ரல் மாதம் 9ம் திகதி பிரிட்டனில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தொடர்ச்சியாக 4வது முறையாக கன்சவேர்ட்டிவ் கட்சி வெற்றிபெற்றுள்ளது.1987ம் ஆண்டு தேர்தலில் பெற்ற பெரும்பான்மை குறைந்தபோதும்,கடந்த 150 ஆண்டுகளில் ஆளும்கட்சியொன்று தொடர்ந்து 4 தடவைகள் வெற்றிபெற்றது மாபெரும் சாதனையே.பல்வேறு கணிப்புக்களும் தொழிற்கட்சியே அதிக இடங்களில் வெற்றிபெறும் எனத்தெரிவித்திருந்ததுடன் எந்த ஒரு கட்சிக்கும் போதிய பெரும்பான்மை கிடைக்காது எனத் தெரிவித்திருந்தன..ஆனால்,தேர்தல் முடிவுகள் எல்லாக் கணிப்புக்களையும் மீறி கன்சவேர்ட்டிவ் கட்சிக்கு தனியாக ஆட்சியமைக்கும்வண்ணம் போதிய பெரும்பான்மையை அளித்துள்ளன. தேர்தல்முடிவுகளின் விபரம் வருமாறு:

மொத்த இடங்கள்: 651

கன்சவேர்ட்டிவ் கட்சி -336
தொழிற்கட்சி -271
லிபரல் டெமொகிறட்ஸ் - 20
SNP/PC - 7
ஏனையோர் - 17

1979 ம் ஆண்டு தேர்தலில் மார்கரெட் தச்சர் தலைமையில் ஆட்சியமைத்த கன்சவேர்ட்டிவ் கட்சி,1983, 1987 ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் வெற்றிபெற்றது.1990 ம் ஆண்டு தச்சரின் ராஜினாமாவை அடுத்து ஜோன்மேஜர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் தெரிந்ததே.ஜோன்மேஜர் முதன்முறையாக தேர்தலை கன்சவேர்ட்டிவ் கட்சியின் தலைமைப்பொறுப்பை ஏற்றபின் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
நிரஞ்சன் தேவா என்ற ஆசிய நாட்டவரும் முதன்முறையாக கன்சவேர்ட்டிவ் கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.இவருடன் சேர்த்து புதிய பாராளுமன்றத்தில் ஆசிய,கறுப்பு இனத்தவர்கள் 6 பேர் அங்கம் வகிக்கின்றனர்.



www.tamilarangam.net

❊ 1968ம் ஆண்டுமார்ச் மாதம் 12 ம் திகதி சுதந்திரமடைந்த மொரிசியஸ் கடந்த மார்ச் மாதம் 12 ம் திகதிமுதல் குடியரசானது.

❊ கடந்த மார்ச் மாத இறுதியில் பிரான்சில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆளும் சோஷலிஸ்ட் கட்சி தோல்விகண்டுள்ளது. 18.3 வீத வாக்குகளை மட்டுமே பெற்ற சோஷலிஸ்ட் கட்சியின் தோல்வியை அடுத்து பிரதமர் எடித் கிறெசன் ராஜினாமாச்செய்துள்ளர். 5 வது பிரெஞ்சுக்குடியரசின் 34 வருடகாலத்தில் மிகக்குறைவான காலம்,அதாவது 323 நாட்கள் மட்டுமே பிரதமராக இருந்த கிறெசனின் இடத்துக்கு, 66 வயதான பியரே பெரகோவோ நியமிக்கப்பட்டுள்ளார். 577 உறுப்பினர்களைக்கொண்ட பாராளுமன்றத்தில் சோஷலிஸ்ட் கட்சி 270 உறுப்பினர்களைமட்டுமே கொண்டுள்ளது.26 கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடனே பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுவந்தன.ஆனால், புதிய பிரதமருக்கு தாங்கள் ஆதரவளிக்கப்போவதில்லையென தற்போது கம்யூனிஸ்டுகள் மறைமுகமாகக்கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

❊ எதிர்வரும் ஜூன் மாதம் 23 ம் திகதி இஸ்ரேலில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஆளும் லிக்குவிட் கட்சியைவிட தொழிற்கட்சிக்கு அதிகவாய்ப்புக்கள் இருப்பதாக அண்மையில்பெறப்பட்ட கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.முன்னாள் நிதியமைச்சரும் இராணுவத்தலைமை அதிகாரியுமான இற்சாக் றபீனின் தலைமையிலான தொழிற்கட்சி ஆட்சிக்குவந்தால் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக்கரை.காஸாப் பிரதேசங்களில் ஓரளவு பிரதேசங்களை விட்டுக்கொடுத்து, பாலஸ்தீனத்தவர்களுடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளும் எனத் தெரிவித்துள்ளது.

❊ தென் ஆப்பிரிக்காவில் அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பான வாக்கெடுப்பில் ஜனாதிபதி கிளார்க் அமோக வெற்றியீட்டியுள்ளார். 100 ஆண்டுகளுக்குமேலாக நடைமுறையில் இருந்துவரும் வெள்ளையர்கள் ஆட்சிக்கு முடிவுகண்டு கறுப்பு இன மக்களுடன் இணைந்து ஆட்சிசெய்யும் நடைமுறைக்கு இம்முடிவுகள் வழிகோலியுள்ளன.68.7 வீதமான வெள்ளை இனமக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையே.

# என்ன நடக்கிறது?

www.tamilarangam.net

- லிபியாவுக்கெதிரான ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபைத் தீர்மானம் ஏப்ரல்மாதம் 15 ம் திகதிமுதல் அமுலுக்குவந்துள்ளது. ஆயுதவியாபாரம்,விமானப் போக்குவரத்துக்குத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளதோடு லிபிய ராஜ தந்திரிகளின் எண்ணிக்கைகளும் குறைக்கப்படவேண்டும் எனவும் இத்தீர்மானம் கோருகிறது. 1988 ம் ஆண்டு ஸ்கொட்லாந்திலுள்ள லூக்கபீக்கு மேலாக விமானமொன்றைக் குண்டுவைத்துத் தகர்த்த இருவரை விசாரணைக்காகக் கையளிக்காதமைக்காகவும்,1989 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நைகருக்கு மேலாக ஒரு விமானத்தைக் குண்டுவைத்துத் தகர்த்ததுதொடர்பான விசாரணைகளுக்கு லிபியா ஒத்துழைக்கத் தவறியமைக்காகவும் லிபியாவுக்கு எதிராக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா,பிரிட்டன், பிரான்ஸ்,ஆகியநாடுகள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை இந்தியா,சீனா,மொராக்கோ,சிம்பாப்வே,கேப்வேர்டே ஆகிய 5 நாடுகள் தவிர ஏனைய 10 நாடுகளும் ஆதரித்து வாக்களித்துள்ளன. லிபியாவிலுள்ள அமெரிக்கர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

- இந்தியாவின் வெளியுறவு அமைச்சரான மாதவ்சிங் சோலங்கி போபர்ஸ் விசாரணைகளைத் தாமதப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டதையடுத்து தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

- இந்தியாவின் பிரபல திரைப்பட இயக்குனரான சத்யஜித்ரே சினிமாத்துறைக்குச் செய்த மகத்தான பங்களிப்புக்காக ஆஸ்கார்விருது வழங்கப்பட்டுள்ளது.இருதயநோய்க்காக சிகிச்சை பெற்றுவரும் ரேக்கு ஆஸ்பத்திரியில்வைத்தே ஆஸ்கார் கமிட்டியினர் இந்தவிருதை வழங்கினர்.

- ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புப்பூனைகள் என்றபெயர்கொண்ட கொலைகாரர்களின் படையின் உதவியுடன் அரசியல் எதிரிகள் பலரை 1988, 1989 ம் ஆண்டுகளில் கொலைசெய்துள்ளனர் என்ற தகவல்கள் ஆதாரங்களுடன் வெளியாகியுள்ளது. பல சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. முன்னாள் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனாலான உடுகம்பொல, 1000 க்குமேல் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். தலைமறைவாகியுள்ள இவர் ஜனாதிபதி பிரேமதாசாமீது மேலும் பல குற்றச்சாட்டுக்களைத்தெரிவித்துள்ளார்.

www.tamilarangam.net

- சிங்களவர்கள் பௌத்தசமய வழிமுறைகளையும் பண்பாடுகளையும் எப்போது மறந்துவாழத்தலைப்பட்டார்களோ அன்றுமுதல் தமிழ்சகோதரர்கள் ஆயுதம் ஏந்த முற்பட்டனர் என சர்வோதய இயக்கத்தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன கூறியுள்ளார்.

- 2500 கோடி ரூபாய் வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையாக இருக்கையில் 3000 கோடி ரூபாய்க்கு 6 விமானங்களை இலங்கை அரசு வாங்கியதை எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

- சீனா 40 கோடியே 50 இலட்சம் ரூபாயை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

- பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது நாட்டைக்காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானது என பிரதி சபா நாயகர் காமினி பொன்சேகா பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

- பாஸ்பாம் ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் உடனடியான இருதரப்பு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த பாடுபடும்படியும் சமாதான பேச்சு வார்த்தைகளின்மூலம் உக்கிரமான பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்படும் வரை மக்களை புதிதாக குடியேற்றுவதை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறும் அண்மையில் யாழ்.சென்று திரும்பிய அனைத்துத் தேவாலய கிறிஸ்தவ நல்லெண்ணக்குழு இலங்கை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

- மக்கள் கருத்தறிய தெரிவுக்குழுவோ,பிக்குகளோ யாழ். வரலாம் என விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கத்தோலிக்க தூதுக்குழுவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

- 1983ம் ஆண்டு இனக்கலவரங்களின்போது மூடப்பட்ட இரத்மலானை இந்துக்கல்லூரியை புதுப்பித்து பல தமிழ் மாணவர்களுக்கு கல்வியயிற்றக்கூடியவாறு மீண்டும் திறக்கவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாச பணிப்புரை வழங்கியுள்ளார்.

- 100 தமிழ்ச்சிறுவர்களை பிக்குகளாக்குமாறு ஜனதிபதிக்கு பிக்குமார் சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது.பௌத்தமதம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு 2300 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு பொஸன் தினத்தன்று 2300 சிறுவர்கள் இளம்பிக்குகளாகச்சேர்த்துக் கொள்ளப்படும்போது அவர்களிடையே 100 தமிழ்ச்சிறுவர்கள் இடம்பெறச்செய்யப்படவேண்டும் என இலங்கை மக்கள் பிக்குமார் சங்கம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

- எஸ்.கந்தசாமி.

www.tamilarangam.net

"தீவான்"

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ராதாவின் விருப்பப்படியே,விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தைவிட்டு படிப்பு முடிந்து வெளியேறிவரும்வரை இருவரும் காத்திருந்தார்கள்.
அந்தக்கிராமத்திலேயே ஆசிரியநியமனம் கேட்டிருந்தான் விஸ்வபாரதி.
கண்ணையருக்கும் மனைவிக்கும் ராதாவை மிகவும் பிடித்துப்போயிருந்தது.
அவனின் படிப்புமுடிந்து அடுத்தநல்லமுகூர்த்ததிலேயே திருமணம் இனிதே.எளிமையாக நடந்தேறியது.
பெரியபெட்டையும் கணவனுமே ராதாவுக்கு தாயும் தகப்பனுமாக நின்று எல்லாவற்றையும் நிறைவேற்றிமுடித்தார்கள்.
மாலையில் ராதாவை மாப்பிள்ளைவீட்டுக்கு அழைத்துச்செல்லும்போது பெரியபெட்டை கண்ணீர்விட்டு அழுதாள்.
''என்னபிள்ளை உன்ரை தங்கச்சி நாடு தேசம்விட்டா போகப்போறா...ஏதோ ரெண்டு நாளைக்கு சம்பிரதாயபூர்வமா என்ராவீட்டை கூட்டிக்கொண்டுபோறன். அடுத்தநாளே உன்னட்டை ஓடிவாத்தானேபோறா.''என்று அவளை ஆசுவாசப்படுத்தினார் கண்ணையர்.

வெள்ளித்தட்டில் ஒரு கப் பாலை எடுத்துக்கொண்டு மெள்ளமெள்ள அறையினுள் நுழைந்தாள் ராதா.
அவளை வெட்கம்பிடுங்கித்தின்றது.கையிலிருந்த தட்டுடன் கப் தாளம்போட்டது.
அவள் அதை இறுகப்பற்றிக்கொண்டாள்.தட்டைமெதுவாக கட்டில் அருகில் வைத்தவள்,விஸ்வபாரதியின் பாதங்களில் மானசீகமாக விழுந்து வணங்கினாள்.அதில் எந்தச்சம்பிரதாயமும் இருக்கவில்லை.
அவன் தனக்குக்கிடைத்த வாப்பிரசாதமென்றே எண்ணி வணங்கினாள்.
கண்ணீர் அவன் பாதங்களை நனைத்தபோதுதான்,விஸ்வபாரதி அவளை அப்படியே தூக்கி அணைத்துக்கொண்டான்.
ஆபாசமோ உணர்ச்சிக்கலப்புக்களோ இல்லாமல் அவள் நெற்றியில் இறுக முத்தமிட்டான்.

# அவள்

www.tamilarangam.net

அவனின் மார்பில் சாய்ந்துவிட்டிருந்த அவளின்மோவாயைத் தொட்டு, அவளின் முகத்தை தனது முகத்துக்குநேரேகொண்டுவந்தான்.
''இப்போ சந்தோஷம்தானே ராதா...?''
மூடியிருந்த கண்களைத்திறக்காமலேயே தலையை மேலும்கீழுமாக அசைத்த அவள் மீண்டும் அவன் மார்பிலேயே புதைந்துகொண்டாள்.
''உன்னை ஒன்று கேட்கட்டுமா ராதா...?''
அவளது உச்சியை முகர்ந்தவாறே கேட்டான் அவன்.மல்லிகைப்பூவின் வாசனை அவன்மனதைக் கிறங்கச்செய்திற்று.
''..ம்!'' அவள் அவன் மார்பில் கோடுவரைந்தாள்.
''நான் உன்னைக் கல்யாணம் செய்திருக்காவிட்டால் என்ன செய்திருப்பாய்?'' அவன் கேட்டான்.
''இருந்திருப்பன்...இப்பிடியே இருந்திருப்பன்....நான் சாகும்வரைக்கும் உங்கடை நினைவோடை இப்பிடியே இருந்திருப்பன்''—அவள் விசும்பினாள். அவன் மார்பைக்கண்ணீரால் ஈரமாக்கினாள்.
''எய்...என்ன சின்னப்பிள்ளைமாதிரி....''செல்லமாகக்கடிந்துகொண்டான் விஸ்வபாரதி.
அவளின் முதுகுப்பகுதியை இதமாக வருடியவாறே கூறினான்.
''காதல் எண்டால் என்றைக்கும் அழியாதது...அது காமக்கலப்பில்லாதது. உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது...காதலுக்கு உடல்கள் அவசியமில்லை... இரண்டு புனிதமான,நிதர்சனமான ஆன்மாக்களின் சங்கமம்தான் காதல்...ராதா...இதுக்கு கல்யாணம் காட்சி மாலை எல்லாம் தேவையில்லை உடல்கள் இறக்கும்போது இவையும் இறந்துபோய்விடும்.காதல் அப்பிடியில்லை...நாங்கள் இறந்தபின்னும் வாழும்...,அது இறந்தும் வாழும். அப்படியொன்றைத்தான் நான் எனக்குள்ளை வளர்த்தன்...உனக்காகவே வளர்த்தன்.''
—உணர்வுகளின் மிகுதியால் அவளை இறுகக்கட்டிக்கொண்டான் விஸ்வபாரதி.
''நாங்க ரெண்டுபேரும் இப்பிடியே இருக்கவேணும்..வாழ்க்கைபூராவும்.. நமக்கிடையிலை எந்தச்சின்னப்பிரிவும் வந்திடக்கூடாது.''
கண்ணீரைக்கட்டுப்படுத்தமுடியாமலேயே சொன்னாள் ராதா.
முதலில் இருவரின் கண்ணீரும்தான் சங்கமமாகிற்று.

அதிகாலையிலேயே எழுந்திருந்த அவள் குளித்து முழுகி விபூதிபூசி,நெற்றியின் நடுவிலும்,அதற்கு சற்றுமேலேயுமாக இரண்டு இடங்களில் பெரிதாக குங்குமமிட்டு, முழுமையாகத்துடைபடாமல், சொட்டுச்சொட்டாக நீர்த்துளிகளைக்கொட்டி பின்புற புடவையை நனைத்து விட்டிருந்த கூந்தலில் ஒரு மஞ்சள் அலரியைச்செருகி புடவைத் தலைப்பை அப்படியே முதுகுப்புறமாக கொண்டுவந்து தெரிந்தும் தெரியாமலும் ஒளிகாட்டிக்கொண்டிருந்த தனது வெளிர்மஞ்சள் நிற இடையில் அள்ளிமுடிந்து,கையில் பால் கோப்பையுடன் கணவனிடம் சென்றாள் ராதா.
இந்த ஒரு இரவுப்பொழுதுக்குள்ளாகவே முழுப்பரிணாமம்பெற்றிருந்தாள் ராதா.
ஒரு முழுமையான குடும்பப்பெண்ணாகவே அவள் பரிணமித்தாள்.

www.tamilarangam.net

இனி தன்னுடைய வாழ்க்கை தனக்கு சொந்தமானதல்ல...அது இன்னொருவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுவிட்டதை அவள் முழுதாகப் புரிந்துவிட்டிருந்தாள்.
நான் நேற்றுவரை வயல்வெளிகளில் ஓடித்திரிந்த ராதாவில்லை...
எனது பாதங்களுக்கு மலர்களால் விலங்கிடப்பட்டுவிட்டது....
அதை இட்டவன் பாதங்களை தன் அன்புமலர்களால் அர்ச்சிப்பதே தனது வேலை என்பதை விடிவதற்குள்ளாகவே உணர்ந்துவிட்டிருந்தாள் அவள்.

விஸ்வபாதி இன்னும் விழித்துக்கொள்ளவில்லை.
மெல்லக்கதவினைத்திறந்தவாறே உள்ளே சென்றவள்,ஓசைப்படாமல் பால் கோப்பையை மேசைமேல்வைத்துவிட்டு,கணவன் அருகில்சென்று அவனின் முகத்தை தன் விழிகளால் உற்றுநோக்கினாள்.மெதுவாகக் குனிந்து அவன் கன்னங்களில் முத்தமிட்டாள்.
அந்தத்திடீர் சுகத்தில் திடீரென விழித்துக்கொண்ட விஸ்வபாரதி தன்முன்னால் ஒரு கிராமத்துத்தேவதையாகநின்ற ராதாவைக் கண்கொட்டாமல் பார்த்தான்.
அவனால் தன் கண்களையே நம்பமுடியவில்லை.எவ்வளவு அழகாக இருக்கிறாள்!
''ராதா நேற்று நீ இந்தக்கோலத்திலேயே மணவறையில் இருந்திருக்கலாம்...
எவ்வளவு அழகாக இருக்கிறை தெரியுமா...மஞ்சள்புடவை,அலரிப்பூ கண்ணையேபறிக்கிறமாதிரி சிவப்புப்பொட்டு,இப்பத்தான் தெரியுது...
நான் எவ்வளவு கொடுத்துவச்சவன் எண்டு.''
அப்படியே அவளை வாரி அள்ளிக்கட்டிக்கொண்டான்.
''இந்தக் குங்குமப்பொட்டு உனக்கு எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா...
ஒருநாள்கூட இந்தப்பொட்டைவைக்க மறந்திராதை...நித்திரை கொள்ளும்போதுகூட பத்திரமா பாத்துக்க...உன்ரை நிறத்துக்கும் பொட்டுக்கும்...அடேயப்பா...நெற்றியிலைமட்டுமில்லை உடம்பு பூராவுமே வச்சு அழகுபாக்கவேணும்போல இருக்கு.''
அவளை அப்படியே இறுக்கிக்கொண்டான்.. அந்த அதிகாலை அவர்களுக்கு இரண்டாவது இரவு.

ராதா–விஸ்வபாரதி 15 வருட இல்லறவாழ்க்கை பலருக்கு பலவித உணர்வுகளைத் தோற்றுவித்ததில் வியப்பில்லைத்தான்.
ஒரு குடும்பத்தில் சற்றேனும் சறுகலோ அல்லது சச்சரவோ என்றால் அதைச் சரிப்படுத்த ராதா–விஸ்வபாரதி ஒற்றுமையைத்தான் உதாரணமாகக் கொண்டுவருவார்கள். சிலவேளைகளில் பொறாமைகூடப் பட்டுக்கொள்வார்கள்.
''நாளைக்கு இதுகளின்ரை பிள்ளையள் கல்யாணம் கட்டப்போகுதுகள்...
இதுகள் என்னடா எண்டா நேற்றுத்தான் கல்யாணம் கட்டினவைபோல தெருவாலை போகேக்கைகூட சிரிப்பும் நெளிப்பும்....''என்று எரிச்சல்பட்டுக் கொள்பவர்கள்கூட உண்டு.
இவை ராதாவின் காதுகளிலும் விழாமலில்லை.அதற்காக அவள் அங்கலாய்ப்பதில்லை.பதிலாகப் பெருமைப்பட்டுக்கொள்வாள்.
அந்தளவுக்கு அவள் தன் குடும்பத்தை நெறிப்படுத்தியிருந்தாள்.

www.tamilarangam.net

விஸ்வபாரதியின் தரம். அவரை மற்றவர்களிலிருந்து தானாகவே உயர்த்தியிருந்தது.
அவரைவிட மூத்தவர்களாக இருந்தாலும்கூட அவரை''மாஸ்ரர்'' என்றுதான் அழைத்தார்கள்.அவரிடத்தில் படித்தவர்களோ,படித்துக் கொண்டிருப்பவர்களோ,அல்லது படிக்காதவர்களோ அவரிடம் அதிக மரியாதை கொண்டிருந்தார்கள்.
பள்ளிக்கூடம்,மனைவி,பிள்ளைகள்...இவைதான் அவரின் உலகம்.
மற்றப்படி எல்லாமே ராதாதான்.
வீட்டுவேலைகள்,வெளிவேலைகள்,பிள்ளைகளைப் பாமரிப்பது எல்லாமே அவள்தான்.ஒவ்வொருமாத இறுதியிலும் சம்பளப்பணத்தை அப்படியே ராதாவிடம் கையளித்துவிடுவார் விஸ்வபாரதி.
அவ்வளவுதூரம் அவருக்கு மனைவியின் நிர்வாகத்தில்தான் நம்பிக்கை.
எந்த ஒன்றிலுமே தலையிடுவதில்லை.
''இவன் விச்சுவை ஒருக்கா என்னெண்டு கேளுங்க...கொஞ்சம்கூடச் சொல்லுக்கேக்கிறானில்லை ...''
சிலவேளைகளில் மூத்தவனைப்பற்றிக் கணவனிடத்தில் முறையிடுவாள் ராதா.
''ராதா...இதுகளை நீயே பாத்துக்க...பிள்ளையளுக்கு செல்லம் குடுக்கிறதும் நீதான்...பயம் காட்டிறதும் நீதான்...இதிலை நான் தலையிட்டா நாளைக்கு அதுகள் எனக்குத்தாற மரியாதையையும் தராமல்போயிருங்கள்''
சிரித்தவாறே நழுவிவிடுவார் விஸ்வபாரதி.

விச்சு,விஷாலி..ஆஸ்திக்கொரு ஆண்,ஆசைக்கொருபெண்.
விச்சுவுக்கு பதினான்கு வயதாகிறது.
அதன்பிறகு இரண்டு வருடம்கழித்து பிறந்தவள் விஷாலி.
படிப்பு விஷயத்தில் இரண்டுமே புலிகள்தான்.ஆனால் வீட்டில்....
வீடு இரண்டுபடும்.
அவர்களுக்கு தகப்பனிடத்தில் ஏகப்பட்ட செல்வாக்கு...தாயிடமும்தான்..
ஆனால் சற்று பயமும்.விஸ்வபாரதி பிள்ளைகளுக்குக் கொடுத்த இடம்...
அவர்களுக்கு ராதாவிடத்தில் இருந்த பயத்தைக் கொஞ்சம் குறைத்து விட்டிருந்ததும் உண்மைதான்.
''நூறுதடவை சொன்னன் இதுகளுக்குச் செல்லம்கொடுக்காதேங்கோ எண்டு...
இப்ப பாருங்க என்ன நடந்திருக்கெண்டு.''
தான் செல்லமாக வளர்த்த பூனைக்குட்டியை கடிக்கவந்த பக்கத்துவீட்டுநாயை விச்சு கல்லால் அடிக்க..அந்தநாய் அலறியவாறே ராதா பக்குவமாய் பாத்திபோட்டு வைத்திருந்த குரங்குவால்பூக் கன்றுகளையும்,நாலுமணிப்பூக்கன்றுகளையும் துவம்சம் செய்துகொண்டு ஓடியதைக் கண்ட ராதா கணவனிடத்தில் சற்று கோபமாகக்கத்தினாள்.
நிலைமையைப்புரிந்துகொண்டு விஸ்வபாரதி மௌனமாக இருந்தார்.
பதிலுக்கு ஏதாவது சொல்லமுயற்சிப்பது பயன்தராது என்பது அவருக்குத்தெரியும்.
அன்றுமாலை ராதா கோபம்தணிந்து ஆறுதலாக இருக்கும்போது

www.tamilarangam.net

அவர் அவளிடம் சென்று அருகில் அமர்ந்தார்.குரலை மெள்ள செம்மைப் படுத்தியவாறே சொன்னார்....

''ராதா உனக்குத் தெரியாதெண்டில்லை...பிள்ளையள்விடுகிற பிழையளை நாங்க சுட்டிக்காட்டத்தான் வேணும்.அதுக்காக நாங்க அதுகளைப் பயப்படுத்தக்கூடாது.இண்டைக்கு நாடு இருக்கிறநிலைமையிலை நாளைக்குக் காலையிலை நாங்க நித்திரையாலை எழும்புவமா எண்டு எழும்பிறவரைக்கும் தெரியாது..அதுதான் எங்கடை தலையெழுத்தாப் போயிற்று.இந்தக்கிராமத்துக்கு உள்ளேயோ வெளியிலையோ அல்லது உள்ளேயும் வெளியேயும் எத்தனையோ விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கு.எங்கட உயிர் இப்பகூடபோகலாம்.நாங்க வாழ்ந்து எல்லாத்தையும் அனுபவிச்சுப் பாத்திற்றம்.ஆனா எங்கட குழந்தையள் பச்சைமண்ணுகள்...எதையுமே அனுபவிக்காமை..காணாம மடியக்கூடாது. அப்படி அதுகள் வாழவேண்மெண்டா அதுகளே தங்கட தலையெழுத்தை மாத்தவேணும்...தங்கள் தங்கட வாழ்க்கைக்காகவாவது ஒவ்வொரு சின்னஞ்சிறுசும் போராடவேணும்.இண்டைக்கு அதுகளின்ரவிதியை அதுகளே நிர்ணயிக்கவேணும்.அதுக்குத்தான் சொல்கிறன் அதுகளைப்பயப்படுத்தக் கூடாது.பயந்தா கோழைகளாய்ப்போயிடும்.இண்டைக்கு பூனைக்குக் கடிக்கவந்தநாய் நாளைக்கு உன்னைக்கடிக்கவந்தா நீ சும்மா பாத்துக் கொண்டிருப்பையா'? கல்லெடுக்கமாட்டயா'?''

–கேள்விக்குறியோடு நிறுத்தினார் விஸ்வபாரதி.

அவருடைய பேச்சு அவளுக்கு சரியாகப்பட்டது.

அவள் வாயடைத்துப்போயிருந்தாள்.

அவருடைய பேச்சு அவளுக்குமட்டுமல்ல பின்னால் நின்று கேட்டுக் கொண்டிருந்த விச்சுவைக்கூட ஆச்சரியப்படவைத்தது.

அன்று அவனுடைய இதயத்தில் விழுந்த அந்த விதை...முளைவிட ஐந்து வருடங்கள் எடுத்தது என்னவோ உண்மைதான்.ஆனால் முளைத்த மூன்று நாலு நாட்களுக்குள்ளேயே அது விருட்சமானது ஆச்சரியம்தான். அதன்பின்னர் விச்சு அனேகமாக பாடசாலைமுடிந்து வீடுவரத் தாமதமானான்.விடுமுறைநாட்களில் வீட்டில் அவனைக்காணமுடிவதில்லை. நாட்கள்செல்லச்செல்ல சிலவேளை இரவுநேரங்களில் இருளில்கலந்துபோவான். ஒருநாள் கடிதம் ஒன்றை எழுதிவைத்துவிட்டு காணாமலே போனான்.

ராதா வெகுவாக அழுது தீர்த்தாள்.

விஸ்வபாரதியால் அதுமுடியவில்லை.

ஈசிச்செயரில் சாய்ந்தபடியே வலதுகையைமடித்து நெற்றியின்மேல்போட்டபடி முகட்டையே வெறித்துப் பார்த்தவண்ணமிருந்தார்.

மகனை நினைத்துப் பெருமைப்படுவதா,கவலைப்படுவதா...என்று எந்தநிலைக்கும் வாமல் திண்டாடிக்கொண்டிருந்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

(அட்டைப்படம்: ஸ்ரீரஞ்சனி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ாழ்த்துகிறோம்.



ணி நர்த்தனாலய அதிபர்
ா ஆசிரியை
ரீமதி: வானதி தேசிங்குராஜா
வர்களின் மாணவி
செல்வி: துஷ்யந்தி திருச்செல்வம்
வர்களின் நடன அரங்கேற்றம்
astrop-rauxel நகரில்
.03.92 சனிக்கிழமை நடைபெற்றது.

ஷ்யந்தி பரதக்கலையுலகின் ஒளிமிகுந்த
ரகையாகப் பிரகாசிக்கவும்
தக்கலை துஷ்யந்தியால் பெருமை பெறவும்
வரசு வாழ்த்துகிறது.

---

*தகவல்:*
*வசந்தாதேவி புவனேந்திரன்*
*(பிரேமன்)*

# பிறேமனில்
# பரதக்கலை.....

பரதக்கலையைப் பயிலவிரும்பும்
சிறுமியர்,மங்கையருக்கான புதிய
பயிற்சி வகுப்புக்கள்!

ஏப்ரல் மாதம் முதல்
நடன ஆசிரியை செல்வி ஸ்ரீரஞ்சனி குணரத்தினம்
அவர்களால் நடாத்தப்படுகின்றன.
புதன்,வியாழன்,வெள்ளிக்கிழமைகளில்.

முகவரி:
**IMPULS e.v.**
**Fleetrade 78**
**2800 Bremen 1**

**Tel: 498 94 94**



நடன ஆசிரியை
செல்வி: *ஸ்ரீரஞ்சனி குணரத்தினம்*
அவர்களின்

## *பரதநாட்டிய நிகழ்ச்சி!*

காலம்: 09.05.1992 சனிக்கிழமை மாலை 18.30 மணிக்கு
இடம்: **Haus im Park**
**(Zentral Krankenhaus-Ost)**
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


*உங்களை அன்புடன் வரவேற்கிறது -*

**M.MURUGAVEL Im. & Export GmbH**

* ஆசிய உப உணவுப்பொருட்கள்
* மீன் நண்டு றால் வகைகள்
* சமையல் உபகரணங்கள்
* தங்கநகைகள்
* பட்டுப்புடவை வகைகள்
* ஆடவர்,பெண்கள்,குழந்தைகளுக்கான நவீன உடைகள்
* திரைப்படப்பாடல்கள் அடங்கிய AUDIO CASSETTE & CD வகைகள்

* மரக்கறிவகைகள்
(பிரதி சனிக்கிழமைகள்தோறும் இறக்குமதியாகின்றன.)

*என்பனவற்றை மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுடன்-*

* பழைய,புதிய திரைப்படங்களின் VIDEO CASSETTE
* மங்கலவைபவங்களுக்கேற்ற மணவறை அலங்காரப்பொருட்கள்
என்பன வாடகைக்குத்தரப்படும்.
* விழா அழைப்பிதழ்கள்
வீடியோ படப்பிடிப்பு
போக்குவரத்துக்கான வாகன ஒழுங்குகள்
என்பனவும் செய்துதருகிறோம்.

*உங்கள் தேவை எதுவாயினும் இன்றே வருகை தாருங்கள்!*

**M.MURUGAVEL Im.& Export GmbH**
**FALKEN STR-12**
**2800 BREMEN 1**

நிர்வாகி: கே.என்.தர்மபாலன்.

**Tel: 0421/1690955** **Fax: 0421/1690956**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்